வெளியீடு : 29-11-2016 Issued : 29-11-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஜூலை 29, 2016—தொகுதி 5—எண் 3**

**Friday the 29th July 2016—Volume 5—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை -600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

# 29–7–2016

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| **1. முந்தைய சில நாட்களுக்கான பேரவை நடவடிக்கைக் குறிப்புகளின் சில பகுதிகளை நீக்கக் கோருதல்–பேரவைத் தலைவரின் தீர்ப்பு–** | 323-330, 371-372 |
| *திரு. மு.க. ஸ்டாலின்* | 323-325 |
| **திரு. துரைமுருகன்* | 326-327 |
| **2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதத்திற்கான பதிலுரை—** | 330-370 |
| **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 330-370 |
| **3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 372 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, ஆடி 14, திருவள்ளுவர் ஆண்டு—2047

## 2016 ஜூலை 29, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல."*

*விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருப்பாதங்களை இடைவிடாமல் வணங்குகிறவர்களுக்கு எங்கும் எப்பொழுதும் துன்பம் இல்லை.*

**குறிப்பு:** *[ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 1. முந்தைய சில நாட்களுக்கான பேரவை நடவடிக்கைக் குறிப்புகளின் சில பகுதிகளை நீக்கக் கோருதல்— பேரவைத் தலைவரின் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்த அவையிலே நடைபெற்ற சில பிரச்சினைகளையொட்டி, தாங்கள் இன்று ஒரு நல்ல தீர்ப்பு தருவதாக ஓர் உறுதிமொழியை இந்த அவையிலே வழங்கியிருந்தீர்கள். எனவே, அந்தவகையிலே, அந்த நிலையிலே அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அந்தச் செய்திகளை உடனடியாக அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நாங்கள் நேற்றைக்கு எப்படி வலியுறுத்தி இருந்தோமோ, அதை மீண்டும் தொடர்ந்து இன்றும் தங்களிடம் நான் வலியுறுத்துகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் சொல்கிறேன். தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லியிருந்தேன். தீர்ப்பு சொல்லாமல் எப்படி இருப்பேன்? இன்றைக்கு கண்டிப்பாக சொல்வேன். நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) இல்லை, வந்தவுடனே நான் சொல்கிறேன் என்று சொல்லவில்லை. நாளைக்கு தீர்ப்பு சொல்கிறேன் என்று சொல்லியிருந்தேன். அதை நீங்கள் வற்புறுத்த வேண்டாம். நான் தீர்ப்பு சொல்கிறேன் என்றால் உறுதியாகச் சொல்வேன்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வற்புறுத்துவதாக தயவுகூர்ந்து நீங்கள் கருத வேண்டாம். ஏற்கெனவே, இதே வகையில், இந்த அவையிலே கடந்த 20-6-2016 அன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இராஜன் செல்லப்பா அவர்கள் பேசிய பேச்சினையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சொன்னோம். அப்பொழுதும் இதே நிலையைத்தான் நீங்கள் எடுத்தீர்கள். அதற்குப் பிறகு, இரண்டு நாட்களுக்கு முன்பு அதாவது, 27-7-2016 அன்று மாண்புமிகு ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் பேசியபோதும் இதேபோன்று ஒரு பிரச்சினை வந்தது. அப்பொழுதும், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தினோம். அப்பொழுதும் நீங்கள் அதைப் படித்துப் பார்த்து, நீக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் நீக்குகிறேன் என்று சொன்னீர்கள். ஆனால், அதற்கும் நீங்கள் எந்தத் தீர்ப்பும் வழங்கவில்லை. ஆக நேற்றைக்கு நடந்த சம்பவத்தையொட்டியும் அதே நிலையைத்தான் நீங்கள் எடுத்திருக்கிறீர்கள். எனவே, இப்படிப்பட்ட நிலையிலே, இந்த அவையிலே நாங்கள் தொடர்ந்து இருந்து எங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, நீங்கள் உட்காருங்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தீர்ப்பை நான் சொல்கிறேன் என்று சொன்னதை, இந்தக் காலக்கட்டத்திற்குள் இப்படித்தான் சொல்ல வேண்டுமென்று இல்லை. நான் சொல்வேன்; கண்டிப்பாகச் சொல்வேன்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குத் தெளிவாக நீங்கள் சொல்லியிருந்தீர்கள். மீண்டும் மீண்டும் அதையே நீங்கள் சொல்லிக்கொண்டிருந்தால்*

நாங்களும் திருப்பித் திருப்பி அதையேதான் சொல்ல வேண்டியிருக்கும். நீங்கள் அந்தத் தீர்ப்பினை வழங்கவில்லையென்று சொன்னால், நாங்கள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையைப் புறக்கணிப்போம். அந்த சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித் தர வேண்டாம் என்று மன்றாடி நேற்றைக்குக் கேட்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, எங்களுடைய துணைத் தலைவர் அவர்கள், அமைச்சருடைய செய்தி பத்திரிகையிலே வந்துவிடும் எங்களுடைய செய்தி வராது. ஆக, அதையாவது தடுத்து நிறுத்த வேண்டிய முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு வாய்ப்புத் தந்து, அதை மட்டும் இப்போது செய்கிறேன். மற்றவற்றை நாளைக்கு செய்து தருகிறேன், முடிவெடுக்கிறேன் என்று நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். ஆகவே, அந்த நிலையை உணர்ந்துதான் நேற்றைக்கு நாங்கள் பொறுமையாக அமைதியாக இருந்து சபையின் கண்ணியத்தைப் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறோம். தயவுகூர்ந்து மீண்டும் நேற்றைக்கு ஏற்பட்ட ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டாமென்று நான் தங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் உட்காருங்கள். நேற்றைக்கு நான் தெளிவாகச் சொன்னேன். என்ன சொன்னேனென்று கேட்டீர்களேயானால், நான் தீர்ப்பு சொல்கிறவரை, பத்திரிகைகளிலே அமைச்சர் பேசிய பேச்சு வராமல் நிறுத்தி வைக்க வேண்டுமென்று பத்திரிகைகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அது பத்திரிகையில் வரவில்லை. (குறுக்கீடு) அதில் நான் இப்போது மாற்றுக் கருத்து ஒன்றும் சொல்லவில்லை. நான் தீர்ப்பு சொல்கிறவரை, அது பத்திரிகைகளில் வராது என்ற உறுதியை நான் பத்திரிகைகளுக்கு உத்தரவாக தெரிவித்துள்ளேன். அது அப்படியே இருக்கிறது. இன்று காலையிலே proceedings-ல் எவ்வளவோ முக்கியமான விஷயங்கள் எல்லாம் இருக்கின்றன. அவற்றை எடுத்துக்கொள்ள இருக்கிறோம். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் இதைத்தான் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று என்னை வற்புறுத்த வேண்டாம்.

*முற்பகல் 10—05*

இன்றைக்கு நிச்சயமாக நீங்கள் சொல்லியிருக்கிற, என்னுடைய கவனத்திலே, பரிசீலனையில் இருக்கிற அனைத்திற்கும் நான் நிச்சயம் என்னுடைய தீர்ப்புகளை வழங்குவேன். நீங்கள் அதுவரை

பொறுமையாக இருந்து, இந்த அவை நடவடிக்கைகளில் கலந்துகொண்டு, ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நேற்றைக்கு நான் என்னுடைய proceedings-லே, என்ன சொன்னேன் என்று கேட்டீர்கள் என்றால், "நாளை நான் என்னுடைய தீர்ப்பை வழங்குகிற வரை, எந்தப் பத்திரிகையிலும் மாண்புமிகு அமைச்சர் பேசிய குறிப்பு வரக் கூடாது" என்று கட்டாயமாக ஓர் உத்தரவினைப் பிறப்பித்தேன். அதை பத்திரிகைகள் கடைபிடித்திருக்கின்றன. என்னுடைய உத்தரவு அப்படியே இருக்கிறது. நான் நேற்றைக்கு சொல்லியபடி, இன்றைக்கு நீங்கள் சொல்லியிருக்கிற, என்னுடைய பரிசீலனையில் இருக்கிற அனைத்திற்கும் உறுதியாக, தீர்ப்புகளை நான் வழங்குவேன் என்ற உறுதியை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன். நீங்கள் பொறுமையாக உட்கார்ந்து, தயவு செய்து அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, நீங்கள், "என்னுடைய தீர்ப்பை வற்புறுத்த முடியாது, நான் எப்போது வேண்டுமானாலும் சொல்லுவேன்" என்று சொல்கிறீர்கள். அது உங்கள் அதிகாரம், இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், நேற்று நீங்கள், இன்றைக்கு தீர்ப்பு சொல்கிறேன் என்று எங்களுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், இப்போது, 'நான் எப்போது வேண்டுமானாலும் சொல்லுவேன்' என்று சொன்னால், 5 வருடம், போகிறதுக்கு முன்னால்கூட நீங்கள் சொல்லலாம். ஆகையினால், நாங்கள், நீங்கள் கொடுத்த வாக்குறுதியை நம்பி வந்திருக்கிறோம். இன்றைக்கு, நீங்கள் இப்போது தீர்ப்பு சொல்லி அது எங்களுக்கு satisfaction–ஆக இருந்தால், அதன்பிறகுதான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய பதிலுரையை உட்கார்ந்து கௌரவித்து நாங்கள் கேட்போம். இல்லாவிட்டால் புறக்கணிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்று எங்கள் தலைவர் தெளிவாகச் சொன்னார். இப்பொழுது தங்கள் சித்தம் எப்படி? **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. ** அதெல்லாம் நடக்காது. நீங்கள் அதையெல்லாம் பேசவேண்டாம். நான் தெளிவாக திரும்பத் திரும்ப சொல்கிறேன், நேற்றைக்கு நீங்கள் இரண்டு பேரும் கேட்டுக்கொண்டதுதான். "நான் அந்தத் தீர்ப்பை சொல்கிற வரையிலும் பத்திரிகைகள் வெளியிடக் கூடாது" என்று நீங்கள் கேட்டீர்கள். நான் இந்தத் தீர்ப்பை ஒத்தி வைத்திருக்கிறேன். என்னுடைய தீர்ப்பை காலையிலேயே 10-07 மணிக்குத் தான் சொல்ல வேண்டும் என்று ஏதாவது கட்டாயம் இருக்கிறதா? நான் இன்றைக்கு சொல்கிறேன் என்று சொன்னேன். இன்றைக்குச் சொல்வேன். (குறுக்கீடுகள்) அப்படி நீங்கள் என்னை வற்புறுத்தக் கூடாது. பேரவைத் தலைவரை, நீங்கள் இத்தனை மணிக்குத்தான் தீர்ப்பைச் சொல்ல வேண்டும், இப்படித்தான் சொல்ல வேண்டும் என்று வற்புறுத்த முடியாது. நீங்கள் வற்புறுத்துவது முறையற்ற செயல் என்பதை மட்டும் நான் தெளிவாகச் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள், நான் தீர்ப்பு சொல்கிறேன். (குறுக்கீடு) தீர்ப்பு சொல்கிறேன். அது ஒன்று மட்டுமல்ல, ஏற்கெனவே நீங்கள் சொல்லியிருக்கிற, மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் பேசியது குறித்தும் என்னுடைய தீர்ப்பை நான் உறுதியாகச் சொல்வேன். உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அவைக் குறிப்பில் இடம் பெறாது. ** எல்லாம் அவைக் குறிப்பில் இடம்பெறாது. உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக, இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் 10-10

நான் நாளைக்கு தீர்ப்பு சொல்கிறேன் என்று நேற்று சொன்னேன். அந்தத் தீர்ப்பை இன்றைக்கு நான்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வழங்கவிருக்கிறேன். அவை தொடங்கியவுடனேயே பேரவைத் தலைவரை, நீங்கள் தீர்ப்பு உடனடியாகச் சொல்ல வேண்டும் என்று இப்படி வற்புறுத்துவது முறையற்றது என்று நான் பலமுறை சொல்லியும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வேண்டுமென்றே இந்த அவையை அவமதிக்கிற வகையிலே இன்றைக்கு வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, பலமுறை இந்த அவையிலே என்னை அவை நடவடிக்கைகளை நடத்தவிடாமல் தொந்தரவு செய்திருக்கிறார்கள்.

குறிப்பாக, இன்றைக்குப் பேசியிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் மற்றும் அக்கட்சியினர் பலரும் என்னுடைய அறையில் சந்தித்தனர். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் என்னை ஒருமையிலே பேசினார். அதையும் நான் பொறுத்துக்கொண்டேன். அதற்குப் பின்னரும், நேற்று நடந்த சம்பவத்தில் எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் அவையில் இருந்தபோதே, அக்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. பொன்முடி அவர்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவரின் பக்கத்திலே வந்து என்னை ஒருமையில், ஏகவசனத்திலே பேசினார். அதுமட்டுமல்லாமல், திரு. அன்பழகன் மற்றும் திரு. ப. ரங்கநாதன் ஆகியோர் இந்த அவையின் மூலையிலே நின்று கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் சாதாரணமாக செய்கின்ற செயலைச் செய்யாமல், அநாகரிகமாக கையால் சைகைகளைக் காட்டுவதும், இங்கே உட்கார்ந்து கொண்டு மற்ற உறுப்பினர்களை தரக் குறைவாக விமர்சிப்பதும், மாண்புமிகு அமைச்சர்களை விமர்சிப்பதும், மாண்புமிகு அமைச்சர்கள் பதிலளிக்கும்போது கேலியும், கிண்டலுமாகப் பேசுவதுமாக, வன்மையாகக் கண்டிக்கத்தக்க வகையில் அவர்கள் நடந்துகொண்டார்கள்.

நான், எவ்வளவோ பொறுமையாக இந்த அவையை நடத்திச் செல்லவேண்டும் என்பதற்காக, எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை சிறப்பாகப் பயன்படுத்தி அவையை சிறப்பாக நடத்த வேண்டும் என்று நான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். என்னை இந்த அவையில் சபாநாயகர் பதவியிலே உட்கார வைக்கின்றபோது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனக்குச் சொன்ன அறிவுரையில், (மேசையைத் தட்டும் ஒலி) “நீங்கள் சபாநாயகராக, ஒரு துலாக்கோல் போன்று, தராசு போன்று

நடுநிலையோடு நின்று இந்த அவையை நடத்த வேண்டும்" என்று சொன்ன அவர்களது அறிவுரையை நான் சிரமேற்கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஏக வசனத்திலே, ஒருமையிலே பேசி, ஒரு மனிதனை மனிதன் மதிப்பதுபோல்கூட என்னை மதிக்கவில்லை. தனிப்பட்ட முறையிலே என்னை மதிக்க வேண்டாம்; நான் அதை எதிர்பார்ப்பவனும் அல்ல. ஆனால், ஒரு பேரவைத் தலைவரை, பேரவைத் தலைவருக்குரிய, அந்த பதவியினுடைய அந்தஸ்தைக் காப்பாற்றாமல் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் என்னை ஒருமையிலே பேசுவதும், தரக் குறைவாகப் பேசுவதும், அது மட்டுமல்ல, இந்த அவையை இப்படித்தான் நீங்கள் நடத்த வேண்டும் என்று வற்புறுத்துவதும் முறையற்ற செயல்.

அதேபோல, இந்த அவையில் அனைவரையும் சமமாகத்தான் நடத்த வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்ன அறிவுரையை ஏற்று சமமாக நடத்திக் கொண்டிருக்கிறேன். பல சந்தர்ப்பங்களில் இந்த அவையிலே சூடான விவாதங்கள் நடக்கின்றபோது நான் ஆளுங்கட்சியைப் பார்த்து 'உட்காருங்கள்' என்று சொன்னால், அவர்கள் அமைதியாக உட்கார்ந்துவிடுகிறார்கள். அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கட்டளையை ஏற்று அதன்படி நடந்துகொள்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்க்கட்சியின் பக்கம், எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் அக்கட்சி உறுப்பினர்களைத் தூண்டிவிடுவதுபோன்று எழுந்திருங்கள், எழுந்திருங்கள் என்று சொல்கிறார்கள்; தூண்டிவிடுகிறார்கள்; இந்த அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்பு கொடுக்காமல், இந்த அவையை உதாசீனப்படுத்துகிறார்கள்; அவையிலே என்னை நிர்பந்தப்படுத்துகிறார்கள். ஒரு பேரவைத் தலைவரை இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று யாரும் நிர்பந்தம் செய்ய முடியாது. இந்த அவைக்கு வந்திருப்பதை, முறையாகப் பயன்படுத்தாமல், தவறாக என்னை, இந்த சபையை நல்ல முறையில் நடத்தவிடாமல், ஜனநாயக முறையில் நடத்துவதற்கு வாய்ப்பு கொடுக்காமல் நிர்பந்திக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு என்னுடைய தீர்ப்பை நிச்சயம் சொல்கிறேன் என்று நான் சொன்னதற்குப் பின்னரும், இல்லை, இல்லை, இப்பொழுதே சொல்ல வேண்டுமென்று வற்புறுத்தி, வேண்டுமென்றே இன்றைக்கு பேரவையிலிருந்து வெளிநடப்பு

செய்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் தொடர்ந்து இதுபோன்ற செயலில் ஈடுபட்டு, இந்த அவையை நடத்த ஒத்துழைப்பு கொடுக்காத சூழ்நிலையை ஏற்படுத்துவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆனால், இதேபோன்ற செயலை அவர்கள் தொடர்ந்து செய்வார்களேயானால், எனக்குக் கொடுத்திருக்கின்ற விதிகளைப் பயன்படுத்தி நான் நிச்சயம் தக்க நடவடிக்கை எடுப்பேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை முதல் மாநிலமாகக் கொண்டுவருவதற்கு எப்படி பாடுபடுகின்றாரோ *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோன்று இந்த அவையையும் இந்தியாவில் இருக்கின்ற அனைத்து சட்டமன்றங்களுக்கும் முன்மாதிரியாக நடத்த வேண்டும் என்று விரும்புகின்ற எனது ஆவலை, *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தப் பொறுப்பை, எவ்வளவு நிர்பந்தங்கள் வந்தாலும், எனக்கு எவ்வளவு அவமானங்களை அவர்கள் ஏற்படுத்தினாலும் அதை நான் பொருட்படுத்தாமல், இந்த அவையின் விதிகளைப் பின்பற்றி நிச்சயம் இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றி, சிறப்பாக நடத்துவேன் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எதிர்க்கட்சியினருக்கு நான் மீண்டும் எனது கண்டனத்தைத் தெரிவித்து, இந்த அளவுக்கு எனது நிலையைத் தெரிவித்துக்கொண்டு, நான் அடுத்த அலுவலை எடுத்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

## 2. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதத்திற்கான பதிலுரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கான பதிலுரை, மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “என் வாழ்வு எல்லாம் மக்களுக்கே எனக்கென்று ஏதுமில்லை” என்று தனக்கென வாழா தாய்மைத் தவம்! *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏழையரை வாழ்விக்க இறை

*தந்த வழித்துணை! பகையை படிக்கட்டாக்கி வெற்றிகள் குவித்திடும் பகுத்தறிவுப் பெட்டகம்! தொலைநோக்குப் பார்வையில் துடிக்கும் திறம், குறை நோக்கு கொண்டோரை திருத்தும் அறம்! (மேசையைத் தட்டும் ஒலி) ஓராயிரம் எதிரிகள் ஓரணியே திரண்டாலும், தகர்த்துப் பொடியாக்கும் வீரத் திருமகள்! (மேசையைத் தட்டும் ஒலி) திரும்பும் திசையெல்லாம் நம்பிக்கை வெளிச்சம் பாய்ச்சும் திராவிடத்துப் பேரொளி! (மேசையைத் தட்டும் ஒலி) அன்பை அறமாக்கி, ஆற்றலை ஆயுதமாக்கி, அரசாட்சிக்கே இலக்கணம் படைக்கும் அறிவுச் சுடரொளி! (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சிகளைச் சுட்டெரித்து, வீழ்த்திடவே நினைக்கின்ற வீணர்களைப் பொடியாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏணிகளின் தயவின்றி வான்தொட்ட வல்லமை, நதி காக்க, மொழி காக்க, இனம் காக்க, கன்னித்தமிழ் பூமி காக்க, அவதரித்த அன்னைத் திருமகள்! (மேசையைத் தட்டும் ஒலி) பூமி குளிர்ந்திட பொழிகின்ற மழையாய், கழனி செழித்திடப் பாய்கின்ற நதியாய், இருட்டை விரட்டிட தோன்றிய வெளிச்சமாய், தமிழக மக்கள் வாழ்வும், வளமும் பெற்றிடவே இப்பூமியில் வந்துதித்த அன்புத் தாய் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் அம்மா அவர்கள். ஒரு முறை ஆட்சி செய்த கட்சி அடுத்த முறையும் தொடராது என்ற 32 ஆண்டுகால அரசியல் வரலாற்றை உடைத்து, தொடர்ந்து இரண்டாம் முறையும் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் கண்ட இயக்கத்தை ஆட்சிப் பீடத்தில் ஏறச் செய்து, 'முதலமைச்சர் ஆகிவிடலாம்; ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து விடலாம்' என சூழ்ச்சி செய்தோர் சுருண்டுவிழ, கனவு கண்டோர் கதி கலங்க, ஆறாம் முறையாய் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராய்ப் பொறுப்பேற்று, தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் எங்கள் அம்மாதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புதிய சரித்திரம் படைத்த வீர வரலாறே! திராவிடத்தின் வாழ்வே, எங்கள் தெய்வமே, தொடர்ந்து ஆறாவது முறையாக இந்தியத் திருநாட்டிற்கே முன்மாதிரியாக (மேசையைத் தட்டும் ஒலி) திகழக்கூடிய நிதிநிலை அறிக்கையை இப்பேரவையில் சமர்ப்பித்து, தொடர்ச்சியாக நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்திற்கு பதிலளிக்கின்ற பெருமைமிகு நல்வாய்ப்பை எனக்கு அளித்துள்ள, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் உள்ளத்து நன்றியை வாசமிகு மலர்களாக்கி மாண்புமிகு அம்மா அவர்களின்*

பொற்பாதங்களில் சமர்ப்பித்து எனது பதிலுரையைத் தொடங்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் மூலம் மீண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, அவரது வழிகாட்டுதலின்படி வடிவமைக்கப்பட்ட 2016—2017 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை, கடந்த 21 ஆம் தேதி அன்று இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீதான விவாதம் 25, 26, 27 மற்றும் 28 ஆகிய நான்கு நாட்களும் தொடர்ந்து நடைபெற்றது.

இந்த திருத்திய வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்மீது பத்திரிகைகளும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், தொழிற் கூட்டமைப்புகளும், அவரவர் நிலைக்கு ஏற்ப தங்களது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். தற்போதுள்ள ஒரு கடுமையான நிதி சூழ்நிலையில்தான் இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். நிதிநிலை அறிக்கையில் இது குறித்தும், இதற்கான காரணங்கள் குறித்தும் விரிவாக விளக்கப்பட்டது. எனினும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்பட வேண்டியுள்ள திட்டங்கள் ஆகியவற்றை எந்த நிலையிலும் பாதிக்காத வகையிலும், கூடுதல் வரிச் சுமையை மக்கள்மீது திணிக்காமலும் இந்த நிதிநிலை அறிக்கை மிகுந்த கவனமுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-20*

ஒரு சில தலைவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையை ‘வெத்துவேட்டு’ அறிக்கை என்று அரசியல் நோக்குடன் விமர்சனம் செய்திருந்தாலும், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு ஒரு தெளிவான பாதையை வகுத்துக்காட்டியுள்ள ‘வெற்றி’ அறிக்கையாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை உள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த நிதிநிலை அறிக்கையை நடுநிலையோடு நோக்குபவர்களும் இதே கருத்தைத்தான் கொண்டுள்ளனர்.

மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, தமிழ்நாட்டின் முக்கியப் பிரச்சினைகளை முன்னிறுத்தியும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் ஒரு தெளிவான வழிமுறையைக் காட்டும்விதமாக ஐந்து மாநில இயக்கங்களையும், 11 பெரும் திட்டங்களையும் வரையறுத்து, அவற்றின் குறிக்கோள்களை எட்டிடத் தேவையான பல்வேறு திட்டங்களையும், அணுகுமுறைகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. இது மாநில வரவு–செலவுத் திட்டங்களில் இதுவரை இல்லாத ஒரு புதிய அணுகுமுறை ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் முக்கியப் பிரச்சினைகளாக நீர் மேலாண்மை, வறுமை ஒழிப்பு, ஏழைகளுக்கு வீடுகள் கட்டி வழங்குதல், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க திறன் பயிற்சி, சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கு தூய தமிழகம் என ஐந்து இயக்கங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு முன்னிறுத்தியுள்ளது. இதில் மாநில வறுமை ஒழிப்பு இயக்கம், பொருளாதார வளர்ச்சி அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு முக்கிய இயக்கம். இதன் மூலமாக ஏழையெளிய குடும்பங்கள், பொருளாதார மேம்பாடு அடைந்து அவர்களின் வருவாய் பெருக வழிவகுக்கும் திட்டமாக இது உள்ளது. Inclusive growth என்று சொல்லக்கூடிய அனைவருக்கும் பயனளிக்கும் வளர்ச்சி இதன்மூலம் சாத்தியமாகும்.

2016–2017 ஆம் ஆண்டில், மத்திய அரசு, இந்தியா முழுமைக்கும் வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு 1,838 கோடி ரூபாய்தான் ஒதுக்கியுள்ளது. இத்திட்டங்களுக்கு தமிழ்நாட்டிற்கு 261 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிலையிலும், நமது மாநிலத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயன்போடு 2016–2017 ஆம் ஆண்டிற்கு இத்திட்டங்களுக்கு மொத்தமாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் 705.81 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், குடிமராமத்துக்கு புத்துயிர் ஊட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஊக்கத் தொகையான 100 கோடி ரூபாய் உள்பட, நீர் ஆதார மேலாண்மைக்கு 3,406 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, ஏழைகளுக்கு வீடு வழங்கும் திட்டமான குடிசைகளற்ற கிராமம், குடிசைப் பகுதிகளற்ற நகரத்தை உருவாக்கும் திட்டம். இவற்றுக்கு 4,205 கோடி ரூபாயும், தூய தமிழகம் திட்டத்திற்கு 987 கோடி ரூபாயும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்த, திறன் பயிற்சி அளிக்க 150 கோடி ரூபாய் உள்பட, ஐந்து இயக்கங்களுக்கு மட்டும் 2016—2017 ஆம் ஆண்டில் 9,454 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், 11 பெருந்திட்டங்கள் மூலமாக, முதன்மைத் துறை, தொழில் துறை, நகர்ப்புறக் கட்டமைப்பு, சாலைகள், மின் திட்டங்கள் போன்ற பொருளாதாரக் கட்டமைப்பு போன்றவற்றில் ஒரு சிறப்புக் கவனம் செலுத்தி, வளர்ச்சியை நிலைநிறுத்திட இந்த நிதிநிலை அறிக்கை வழிவகுத்துள்ளது. இந்தக் கடினமான பொருளாதார சூழ்நிலையிலும், பல்வேறு திட்டங்களுக்கான ஒதுக்கீடும், துறைகளுக்கான நிதி ஒதுக்கீடும் போதுமான அளவில் செய்யப்பட்டுள்ளது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் மாநிலத்தின் வளர்ச்சியை, பொருளாதார மேம்பாட்டை முன்னிறுத்தி, அதை விரைவுபடுத்த எடுக்கப்பட்டவையே ஆகும். இந்த நோக்கம் நிறைவேறும் என மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உறுதியாக நம்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—25

இந்த திருத்திய வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்தவரை பத்திரிகைகளும் ஒரு பொதுவான விமர்சனத்தை, பொருளாதார வல்லுநர்களின் கருத்தாக தெரிவித்துள்ளன. வருவாய்ப் பற்றாக்குறை ஆண்டுக்காண்டு உயர்ந்து வருகிறதென்றும், அது கணிசமான அளவு உயர்ந்துவிட்டது என்றும், அதுபோல் நிதிப் பற்றாக்குறையும் கடன் அளவும் உயர்ந்துள்ளது கவனத்திற்குரியது என்றும் கருத்துத் தெரிவித்து பல செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. விவாதத்தில் கலந்துகொண்ட மாண்புமிகு உறுப்பினர்கள்கூட இதுபோன்ற கருத்துகளையே வலியுறுத்திப் பேசினர். விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், ஒவ்வோர் ஆண்டும் வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து வருவதாகவும், வரி வருவாய்க் கணிப்புகள் சரிவர கணிக்கப்படவில்லை என்றும், கடன் அளவு மிகவும் உயர்ந்துவிட்டது என்றும், அந்தக் கடனும் தி.மு.க.

ஆட்சியில் மூலதனப் பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட்டதாகவும், தற்போது வருவாய் செலவுகளுக்கும் கடன் பயன்படுத்தப்படுகிறது என்பன போன்ற கருத்துகளை இங்கே தெரிவித்தார். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள், வரவு–செலவுத் திட்டம் பற்றி ஆங்கிலத்தில் தனது கருத்துகளை எடுத்துக் கூறினார். அவரது வினாக்களுக்கும், கருத்துகளுக்கும் நான் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

முதலாவதாக, மாநில வரி வருவாய் (SOTR) கணிப்புகள் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றிக் குறிப்பிடும்போது, “though non-tax revenue and central releases are projected conservatively, inability of the Government, to project SOTR, in the last two years to realise SOTR anywhere, close to the Budget Estimate projections” என்று குறிப்பிட்டிருந்தார்.

முதல் 3 ஆண்டுகள் வரி வருவாய்க் கணிப்புகள் சரியாக இருந்தன என்றும், சென்ற இரண்டு ஆண்டுகளாக, கணிப்புக்கும், இறுதிக் கணக்கிற்கும் வேறுபாடு உள்ளது என்றும், எனினும் வரி அல்லாத வருவாய், மத்திய நிதி ஒதுக்கீடு போன்றவற்றில், கணிப்புப்படியே வருவாய்ப் போக்கும் இருக்கிறதென்றும் கூறி, அரசுக்கு சரியாக கணிக்கத் தெரிந்திருந்தும், கடந்த சில ஆண்டுகளாக, அதைக் கணிக்கும் திறன் இல்லாமல் போய்விட்டது என்றும் கூறியுள்ளார்.

மாநில வரி வருவாய் வரவில் உள்ள, risk and uncertainty, அதாவது நிச்சயமற்ற தன்மை, மற்ற இனங்களில் குறிப்பாக வரி அல்லாத வரவிலோ, மத்திய அரசு வழங்கும் மானிய நிதி உதவிகளிலோ (Grant-in-Aid) இருப்பதில்லை. ஆனால், மத்திய நிதிப் பகிர்விலும், இதுபோன்ற மாறுதல்கள் ஆண்டுதோறும் ஏற்படுகின்றன என்பதே உண்மை. ஏனெனில், இதுவும் மத்திய அரசின் வரி வருவாய் அடிப்படையில் அமைவதால்தான், இத்தகைய கூடுதல், குறைவு ஏற்படுகிறது. அதற்கேற்ப மத்திய அரசால் நமக்கு வழங்கக்கூடிய நிதிப் பகிர்வும் குறைக்கப்படுகிறது.

எனவே, மாநில வரி வருவாய்க் கணிப்புகளில் உள்ள இத்தகைய சிரமங்களும், நிச்சயமற்ற போக்கும் இருப்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாதது ஒன்றும் அல்ல. ஆனால், பொருளாதாரம் நிச்சயமற்ற போக்கில் செல்லும்போது கணிப்புகள்

மாற வாய்ப்புள்ளன என்று தெரிந்தும், இதை அவர் ஒரு பெரும் குறையாகக் கூறுவது வியப்பாக உள்ளது.

இதற்கு ஒரு படி மேலே சென்று, இதனால் ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறை, 'not by design, but by execution' என்கிறார். அதாவது, 2010–2011 ஆம் ஆண்டு அன்றைய தி.மு.க. அரசு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில், திருத்த மதிப்பீடுகளில் (Revised Estimates) மாநிலத்திற்கு மொத்த வரி வருவாய் 53,782.55 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. ஆனால், கிடைத்ததோ 47,782.18 கோடி ரூபாய்தான். அதாவது, பிப்ரவரி மாத மதிப்பீட்டோடு ஒப்பிடும்போது, மார்ச் மாத இறுதியில், 6,000.37 கோடி ரூபாய் குறைவாகவே கிடைத்தது. இதை design குறையாகவோ அல்லது execution குறையாகவோ எடுத்துக்கொள்ள முடியுமா? நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இதில் அரசியல் பார்வை இல்லாமல் ஒரு நடுநிலையோடு பார்க்க வேண்டும் என்பதுதான். இதுபோன்ற கணிப்புகளில் உள்ள குறைபாடு execution குறை என்ற கருத்து ஒரு தவறான கருத்து என்பதற்கு நான் விரிவான விளக்கத்தை இங்கு அளிக்க விரும்புகிறேன்.

2011-2012, 2012-2013 ஆம் ஆண்டுகளில், வரி வருவாய் நல்ல வளர்ச்சியைக் கண்டது. 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சில வரிகளைத் திருத்தியமைத்தும், அதைத் தொடர்ந்து, அவ்வப்போது சில மாற்றங்களையும் செய்து வந்ததாலும்தான், SOTR 2011-2012 ஆம் ஆண்டில், 24.56 சதவீத வளர்ச்சியையும், 2012-2013 ஆம் ஆண்டில் 19.72 சதவீத வளர்ச்சியையும் கண்டது.

முற்பகல் 10-30

2011-2012, 2012-2013 ஆம் ஆண்டுகளில் பெட்ரோலியப் பொருட்களின் மீதான விலை மாற்றம் அடிக்கடி நிகழவில்லை. எனவேதான் நமது கணிப்புகளும், ஓரளவு சரியாகவே இருந்தன. மாண்புமிகு உறுப்பினர், 'take courageous decision and not popular decision' என்கிறார். அவ்வாறு courageous ஆக முடிவு எடுத்தால், இவர் கட்சியைச் சார்ந்த தலைவர்கள்தான் முதலில் அதற்கு அறிக்கை விடுகிறார்கள்.

2013-2014 ஆம் ஆண்டில் தேசிய அளவில் பொருளாதார தேக்க நிலை தொடங்கியது. இது தமிழ்நாட்டையும் பாதித்ததால்

உற்பத்தித் தொழில், குறிப்பாக Automobile, Cement, Iron & Steel போன்றவற்றிலிருந்து கிடைத்த வணிக வரி வருவாய் குறைந்தது. இது மட்டுமல்லாமல், தொடர்ந்து, 2014-2015 ஆம் ஆண்டிலும், 2015-2016 ஆம் ஆண்டிலும் பல முறை பெட்ரோல் விலையும், டீசல் விலையும் குறைக்கப்பட்டது. 2014-2015 ஆம் ஆண்டில் 6 முறை பெட்ரோல் விலையும், 8 முறை டீசல் விலையும் குறைக்கப்பட்டது. 2015-2016 ஆம் ஆண்டில் 12 முறை பெட்ரோல் விலையும், 14 முறை டீசல் விலையும் குறைக்கப்பட்டது. இவை அடிக்கடி நிகழ்ந்தன என்பதையும், எதிர்பாராமல் நிகழ்ந்தன என்பதையும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். நாம் வரவு-செலவுத் திட்டத்தை ஆண்டு துவக்கத்தில் தீட்டும்போது, இத்தகைய மாற்றங்களை எதிர்பார்ப்பதில்லை. இவை திடீரென எதிர்பாராமல் ஏற்படுகின்ற மாற்றங்கள். இவற்றை, திருத்திய வரவு–செலவு மதிப்பீட்டில் ஓரளவு மாற்றி அமைத்தாலும், இறுதி கணக்கில் சில வேறுபாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. கடந்த இரண்டு ஆண்டுகளில், நமது கணிப்புகளுக்கும், கணக்குக்கும் ஏற்பட்ட வேறுபாடு, இத்தகைய நிகழ்வுகளால்தான் ஏற்பட்டதே தவிர, இதில் execution problem எதுவும் இல்லை.

இது போன்று கணிப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் 2010-2011 ஆம் ஆண்டில்கூட, அதாவது, தி.மு.க. ஆட்சியிலும்கூட ஏற்பட்டது என்பதை ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். இதுபோன்ற எதிர்பாரா சூழ்நிலையை முந்தைய தி.மு.க. அரசு 2008-2009 ஆம் ஆண்டில்கூட, இந்த அளவு சந்திக்கவில்லை. அப்போது பெட்ரோல், டீசல் விலை அடிக்கடி உயர்த்தப்பட்டதால், இயல்பாகவே தி.மு.க. ஆட்சியில் வரி வருவாய் கூடியது. ஆனால் அந்த நிலையில்கூட, வருவாய் பற்றாக்குறை, தி.மு.க. ஆட்சியில் 2009-2010 ஆம் ஆண்டில் 3,531.22 கோடி ரூபாயும், 2010-2011 ஆம் ஆண்டில் 2,728.69 கோடி ரூபாயுமாக இருந்தது. அதனால்தான், அந்த ஆண்டுகளில் வருவாய் பற்றாக்குறைக்கு மட்டும் அல்ல, நிதிப் பற்றாக்குறைக்கும் நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்திற்கு, இதே மாமன்றத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூற்றுப்படி, அந்தச் சூழ்நிலை, தி.மு.க. அரசின் இயலாமையால் ஏற்பட்டதாகக் கருதிவிட முடியுமா?

இதேபோல், முத்திரைத் தாள், வாகன வரி, மாநில ஆயத் தீர்வை ஆகியவற்றிலும் சிறிதளவு தளர்வு ஏற்பட்டது உண்மைதான்.

பொருளாதாரம் தேக்க நிலையில் உள்ளபோது, இந்த வரிகளும் பாதிக்கப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் பொருளாதார நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையில்தான், இந்தக் கணிப்புகள் செய்யப்படுகின்றன. அந்த அடிப்படையில்தான் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் பல நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசும் எடுத்து வருகிறது. வரி நிருவாகத்தையும் சீர்படுத்தி வருகிறது.

அடுத்ததாக, மாநில வருவாய் வளர்ச்சி, மாநில உற்பத்தி மதிப்பின் வளர்ச்சியைவிட குறைவாக இருப்பதாகக் கூறினார்கள். அதாவது, 'growth rate of SOTR, over the last three years, has considerably lagged behind the growth of GSDP' என்று குறிப்பிட்டிருந்தார்.

மாநில உற்பத்தி மதிப்பில் 12 சதவிகிதம் முதன்மைத் துறையைச் சார்ந்தது. இதற்கு பெரும்பாலும் வரி ஏதும் இருப்பதில்லை. 55 சதவிகிதம் சேவைத் துறையைச் சார்ந்தது. இதன் வளர்ச்சி, சேவைத் துறைக்கு வரி விதிக்கும் அதிகாரம் உள்ள மத்திய அரசுக்கே பயன் தரும். மீதமுள்ள 33 சதவிகிதம், இரண்டாம் நிலை துறையைச் சார்ந்தது. அதில் உற்பத்தித் துறை 18.36 சதவிகிதம் மட்டுமே. இதுதான் மாநில அரசுக்கு விற்பனை வரியை அதிகம் தரக்கூடியது. உற்பத்தித் துறையின் வளர்ச்சி, நடப்பு விலை (current price) விகிதப்படி, 2012-2013 ஆம் ஆண்டில் 17.46 சதவிகிதம், 2013-2014 ஆம் ஆண்டில், 1.75 சதவிகிதம், 2014-2015 ஆம் ஆண்டில் 4.28 சதவிகிதம், 2015-2016 ஆம் ஆண்டில் 6.49 சதவிகிதம் என இருந்தது.

முற்பகல் 10-35

எனவே, உற்பத்தித் துறையின் வளர்ச்சி, 2013-2014 ஆம் ஆண்டிலிருந்து குறைவாக இருந்ததால்தான் வரி வருவாய் 2013-2014 ஆம் ஆண்டில் 3.46 சதவிகிதமாகவும், 2014-2015 ஆம் ஆண்டில் 6.70 சதவிகிதமாக உயர்ந்தும், 2015-2016 ஆம் ஆண்டில் 2.31 சதவிகிதமாகவும் குறைந்தது. இப்படி மாநில வரி வருவாய் குறைந்ததற்கு, பெட்ரோலியப் பொருட்களின் வரி வருவாய் குறைந்ததும் ஒரு காரணம்தான் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, மாநில வரி வருவாய், பொருளாதார வளர்ச்சி அளவைவிடக் குறைவாக இருக்கக்கூடாது என்பது உண்மை

*நிலவரத்திற்கு ஒத்துப்போகாத ஒன்று. ஆனால், வரி வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியின் போக்கின்படி இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. ஒருவேளை பொருளாதார வளர்ச்சி சிறப்பாக இருக்குமேயானால், விவசாயம், சேவைத் துறையில் பங்களிப்பையும் உள்வாங்கி,* tax buoyancy, *அதாவது, வரி வருவாயில் ஒரு உந்துதல் இருக்கும். அது உற்பத்தியை மையமாகக் கொண்டுள்ள பொருளாதாரத்தில் அடிக்கடி நிகழும். நமது பொருளாதாரத்திலும் சில சமயம் நிகழ்ந்துள்ளது. உதாரணமாக, 2011-2012, 2012-2013 ஆம் ஆண்டுகளில் அது நிகழ்ந்துள்ளது. இந்த அளவில் இதற்கு விளக்கம் போதும் எனக் கருதுகிறேன்.*

*மூன்றாவதாக, வருவாய் வரவுகளைவிட, வருவாய் செலவினங்கள் அதிகரிப்பதால் வருவாய் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது,* "Revenue expenditure has considerably exceeded the growth in the revenue receipts, thereby causing Revenue Deficit, which is over 10 per cent" *என்று குறிப்பிட்டிருந்தார். இதுபற்றிய விளக்கத்தை நான் தர விரும்புகிறேன்.*

*வருவாய் பற்றாக்குறை குறைய வேண்டுமெனில், ஒன்று வருவாய் வரவு உயர வேண்டும் அல்லது வருவாய் செலவினம் குறைக்கப்பட வேண்டும். வருவாய் வரவை உயர்த்துவது பற்றி பரிசீலிக்க வேண்டுமெனில் வருவாய் வரவுகளில் என்னென்ன இனங்கள் உள்ளன என்பதைப் பார்க்க வேண்டும். இதில் மாநில வரி வருவாய், அதாவது,* SOTR, *வரி அல்லாத வருவாய், மத்திய அரசின் பகிர்வு மானியம், இது தவிர,* grant-in-aid *என சொல்லப்படும் திட்டங்களுக்கான மத்திய நிதியுதவி போன்றவை மட்டுமே. மாநில வரி வருவாயில், வணிக வரிக்கு மிக முக்கியப் பங்கு உள்ளது. மாநில கலால் வரி, முத்திரைக் கட்டணம், வாகன வரி ஆகியனவும் மொத்தம் சுமார் 25 சதவிகிதம் பங்கு அளிக்கின்றன. இதில் உண்மை நிலை என்னவென்றால், பெரும்பாலான வரி வருவாய் மத்திய அரசிடம் உள்ளது. வருமான வரி, தொழில் மீதான* corporate tax, *கலால் வரி, சுங்க வரி, சேவை வரி என அனைத்து முக்கிய வரிகளும் மத்திய அரசிடம் உள்ளன. இதற்கும் மேல் மத்திய அரசு மேல் வரியையும் விதிக்கிறது. ஆனால், மாநில அரசுக்கென்று வணிக வரி மட்டுமே முக்கிய வருவாயாக உள்ளது. வணிக வரியில் பாதிப்பு ஏற்பட்டால் மாநில வரி வருவாய் பெருமளவில் பாதிக்கப்பட்டுவிடும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே கூறியதுபோல், பொருளாதார தேக்க நிலையால் 2013-2014 ஆம் ஆண்டு முதல் Automobile, Cement, Iron & Steel, IMFL போன்றவற்றின் மீதான வரி வருவாய் போதிய அளவு அதிகரிக்கவில்லை. இதுதவிர, பெட்ரோலிய பொருட்களின் விலை குறைவால், அதன் மீதான வணிக வரி இழப்பு ஏற்பட்டது. எனினும், நம் மாநிலத்தில் பெட்ரோல்மீது 27 சதவிகிதம், டீசல் மீது 21.43 சதவிகிதம் என்ற வரி அளவை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு மாற்றவில்லை. இதனால் வரி சதவிகிதம் மாறாமல், அடிப்படை விலை (Base Price) குறையும்போது அதில் வரும் வணிக வரியும் குறையும். உதாரணமாக, 1-7-2014 அன்று பெட்ரோல் லிட்டருக்கு 76.86 ரூபாயாக விற்றபோது, 15.91 ரூபாய் வணிக வரி வருவாய் கிடைத்தது. 16-7-2016 அன்று, 15 நாட்களில் பெட்ரோல் சில்லரை விலை லிட்டருக்கு 61.93 ரூபாயாகக் குறைந்தபோது, வணிக வரி வருவாய் 12.68 ரூபாயாகக் குறைந்துவிட்டது. இதனால் லிட்டர் ஒன்றுக்கு வணிக வரியில் 3.23 ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்படி ஏற்படும் இழப்பை ஈடு செய்யத்தான் அண்டை மாநிலமான தெலுங்கானா, பெட்ரோல் மீதான வரியை 35.20 சதவிகிதமாகவும், டீசல் மீதான வரியை 27 சதவிகிதமாகவும் உயர்த்தியது.

முற்பகல் 10-40

ஆந்திர மாநிலம் இதை முறையே 39.51 மற்றும் 31.20 சதவீதமாக உயர்த்தியது. பல மாநிலங்கள் இந்த வரி விகிதத்தை உயர்த்தி, வரி இழப்பை ஈடு செய்து கொண்டன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அப்படி பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரியை உயர்த்தவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவேளை இந்த வரியை பிற மாநிலங்களைப்போல் உயர்த்தி, ஈடு செய்திருந்தால் 2015-2016 ஆம் ஆண்டில் பெட்ரோலியப் பொருட்களின் மீதான வரி வருவாய் 10,113.64 கோடி ரூபாய்க்குப் பதிலாக 14,419.75 கோடி ரூபாயாக இருந்திருக்கும். இதனால், 2015-2016-ல் மாநில வரி வருவாய் ரூ.4,306 கோடி உயர்ந்திருக்கும். இத்துடன், இதர மதிப்புக் கூட்டு வரியில் ஏற்பட்ட இழப்பையும் சேர்த்தால், சுமார் 6,000 கோடி ரூபாய் 2015-2016 ஆம் ஆண்டில் கூடுதலாகக் கிடைத்திருக்கும்.

இது தவிர, மத்திய பகிர்வு நிதியை பதின்மூன்றாவது நிதிக் குழு தந்த அளவைவிட, பதினான்காவது நிதிக் குழு தமிழ்நாட்டிற்கு நிதி அளவைக் குறைத்துவிட்டது என்ற விவரத்தை இம்மாமன்றத்தில் ஏற்கெனவே தெரிவித்திருந்தேன். நமது மாநிலம் வளர்ச்சியடைந்த மாநிலம் என்பதால், இது குறைக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட இழப்பு, வருடத்திற்கு 6,000 கோடி ரூபாய்.

இது தவிர, மத்திய அரசு நிறுத்திவிட்ட திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து செயல்படுத்துவதாலும், அதாவது, மத்திய அரசு ஒத்துக்கொண்டு நாம் செயல்படுத்திய திட்டங்களை மத்திய அரசு நிறுத்திவிட்டதாலும், மத்திய அரசுத் திட்டங்களில் நிதிப் பகிர்வில் மாற்றம் செய்ததாலும், நமது மாநிலத்திற்கு ஏற்பட்ட கூடுதல் நிதிச்சுமை ஆண்டுக்கு சுமார் 2,600 கோடி ரூபாய்.

எனவே, இவற்றையெல்லாம் கணக்கிட்டால், இந்த 12,000 கோடி ரூபாய் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாகக் கிடைத்திருந்து, மாநில கூடுதல் செலவு 2,600 கோடி ரூபாய் குறைந்திருந்திருந்தால் 2015-2016 ஆம் ஆண்டில் வருவாய் பற்றாக்குறைக்குப் பதில் வருவாய் உபரியாக இருந்திருக்கும். இதன் அடிப்படையில் கணக்கிட்டால், 2016-2017 ஆம் ஆண்டில்கூட, நாம் குறிப்பிட்டுள்ள 15,000 கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறை இருந்திருக்காது. ஆகவே, இந்த வருவாய் பற்றாக்குறை, மாநில அரசின் நிதி மேலாண்மையின் குறைபாட்டால் ஏற்பட்டது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் சொன்னதுபோல் இது design குறையோ அல்லது execution குறையோ அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது ஒருபுறம் இருக்க, அடுத்து வருவாய் செலவினங்கள். இதில் சம்பளம், ஓய்வூதியம், மானியமும்-நிதியுதவியும், செயலாக்கம் மற்றும் பராமரிப்பு, வட்டிச் செலவு ஆகியவை அடங்கும். சம்பளம் 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து 2016-2017 ஆம் ஆண்டு வரை 70 சதவீதம் உயர்ந்துள்ளது. ஓய்வூதியம் 54 சதவீதமும், மானியமும்-நிதியுதவியும் 135 சதவீதமும் உயர்ந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல மானியமும்-நிதியுதவிகளும் அதிகம் கூடியுள்ளன என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், சம்பளமும், ஓய்வூதியமும் உயர்ந்து வருகின்றன என்பதையும், அதைக் குறைக்க

முடியாது என்பதையும், இதுவும் வருவாய் பற்றாக்குறைக்கு ஒரு காரணம் என்றுதான் நான் ஏற்கெனவே தெளிவுபடுத்தினேன்.

மானியமும்-நிதியுதவியும் செலவினத்தில், உணவு மானியம், மின்சார மானியம், உள்ளாட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதி உதவிகள், சத்துணவுத் திட்டம் உட்பட பல நலத் திட்டங்களும் அடங்கும். உணவு மானியம் 2016-2017-ல் 5,500 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது; மின்சார மானியம் 2010-2011-ல் 1,647 கோடி ரூபாயாக இருந்தது. அது, 2016-2017-ல் 9,007 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது; உள்ளாட்சிகளுக்கான பகிர்வு உதவித் தொகை 2010-2011-ல் 5,330 கோடி ரூபாயாக இருந்தது. அது, 2016-2017-ல் 11,514 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது; சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான உதவித் தொகை மானியம் 2010-2011-ல் 1,208 கோடி ரூபாயாக இருந்தது. அது, 2016-2017-ல் 3,820 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது; 2010-2011-ல் 279 கோடியாக இருந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான உயர் கல்வி உதவித் தொகை மானியம் 2016-2017-ல் 1,430 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளளது.

முற்பகல் 10—45

இவையெல்லாம் வருவாய் செலவினமாக இருந்தாலும், குறிப்பாக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் நிதியில், பெரும்பகுதியை அவை சொத்துகளை உருவாக்கும் மூலதனப் பணிக்கே செலவிடுகின்றன. இதில் எந்தச் செலவையும் கட்டுப்படுத்த முடியாது. இதைக் கட்டுப்படுத்த முடியாது என்பதால்தான், வரி வருவாய் மேற்சொன்ன காரணங்களால், 68 சதவீதம் மட்டுமே உயர்ந்துள்ள நிலையிலும், வருவாய் செலவினம் 93 சதவீதமாக 5 ஆண்டுகளில் உயர்ந்துவிட்டதால், வருவாய்ப் பற்றாக்குறையைத் தவிர்க்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இந்நிலை மாறவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. முடிந்தவரை, செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் நல்ல பல நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. நிலைமை மாறும் என்ற நம்பிக்கை உள்ளது. அதனால் வருவாய் வரவும் கூடும் எனக் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவரை, இந்தக் கடினமான பாதையைத்தான் நாம் கடந்து செல்லவேண்டியுள்ளது என்பதை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக நிதிப் பற்றாக்குறை பற்றிய கருத்து.* "Fiscal Deficit projected for 2016-2017 is 2.96 per cent of GSDP, against 3 per cent target of FRBM Act, but the projection for 2017-2018 suggest, we will violate this target next year" *என மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்.*

*வருவாய்ப் பற்றாக்குறை உயரும்போது, நிதிப் பற்றாக்குறையும் உயரும். ஆனால், அது மூன்று சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு, அதாவது, 2017-2018-ல் 3.34 சதவீதம் எனக் கணித்திருப்பதால், தமிழ்நாடு திவாலாகிவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கூறினார். இது தேவையற்ற விமர்சனம். இப்போதுள்ள நிலவரப்படி அடுத்த ஆண்டுக்கான கணிப்புதான் இது. இப்போதுள்ள நிலவரப்படி இது 2017-2018 ஆம் ஆண்டுக்கான கணிப்புதான் இது. அவர் கூறியபடி 2017-2018 ஆம் ஆண்டிற்கு 3.34 சதவீதம் எனக் கணித்திருப்பது, நடுத்தரக் கால நிதி கணிப்புப்படி, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு கணிக்கப்பட்டவை ஆகும். அது தற்போதுள்ள சூழ்நிலைப்படி,* FRBM Act *2003-ன்படி கணிக்கப்பட்டது. ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், செலவினம் ஏற்பட வாய்ப்புள்ளதைக் கணக்கிட்டு, 2017-2018 ஆம் ஆண்டுக்கான நிதிப் பற்றாக்குறை கணிக்கப்பட்டுள்ளது. அடுத்த அண்டு, இதே சூழ்நிலை இருக்கும் என்று கருத முடியாது. இது மாறலாம். அதற்கேற்ப அடுத்த ஆண்டு வரவு-செலவுகள் திட்டமிடப்படும்போது, கணிப்புகள் மாறும் அல்லது அப்போதுள்ள நிலவரத்திற்கேற்ப முடிவுகள் எடுக்கப்படும்.*

*மேலும், திரு. எ.வ. வேலு அவர்கள், மத்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையைச் சுட்டிக்காட்டி, 'இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிக நிதிப் பற்றாக்குறை' என்று குறிப்பிட்டார். இது குறித்து, ஒரு ஆங்கில நாளேடுகூட, 'தமிழ்நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை, நம்மைவிட உற்பத்தி அதிகம் உள்ள, மகாராஷ்டிரா மாநிலத்தைவிட அதிகம்' எனத் தவறாகக் குறிப்பிட்டுள்ளது.*

*2015-2016 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டப்படி, தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக்குறை 31,829 கோடி ரூபாய் என்றும், மகாராஷ்டிரா மாநிலத்தில் 2015-2016 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்படி, நிதிப் பற்றாக்குறை 30,733 கோடி ரூபாய் என்றும் ரிசர்வ் வங்கியின் அறிக்கையில் உள்ளது. ஆனால், மகாராஷ்டிரா*

மாநிலத்தில், அம்மாநிலம் 2015-2016 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில், நிதிப் பற்றாக்குறை 37,949 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுவிட்டது. இதுதான் உண்மை, ஆனால் இது அந்த அறிக்கையில் இல்லை.

நமது திருத்த மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக்குறை 32,360 கோடி ரூபாய் மட்டுமே. ரிசர்வ் வங்கி அறிக்கை திருத்த மதிப்பீடு வருவதற்கு முன் தயாரிக்கப்பட்டது என்பதால், இந்த விவரங்கள் இதில் இடம் பெறவில்லை. 2014-2015 ஆம் ஆண்டில்கூட, மகாராஷ்டிரா மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை 31,826 கோடி ரூபாய். ஆனால், நமது மாநிலத்தில் 2014-2015 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை 27,160 கோடி ரூபாய் மட்டுமே என்பதை இங்கே நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மகாராஷ்டிராவை விட, நமது மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை குறைவாகத்தான் உள்ளது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், நிதிப் பற்றாக்குறை அளவை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அந்த நிதிப் பற்றாக்குறை, மாநில உற்பத்தி மதிப்பில் எவ்வளவு என்பதே, சரியான அளவுகோல் என்பதையும் இங்கு தெரிவிக்க விரும்புகின்றேன். அதன்படி, இதுவரை மூன்று சதவிகிதத்திற்குள் தமிழ்நாட்டில் நிதிப் பற்றாக்குறை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை நிலையாகும்.

முற்பகல் 10—50

கடன் அளவைப்பற்றி இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துகளைத் தெரிவித்தார்கள். “Increase in debt of over one lakh crore since 2011 is a cause of concern. Consequently, the interest payment will increase from 11 per cent to 14 per cent” என்று திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் கருத்து தெரிவித்தார்.

மேலும், அவர் கூறும்போது தற்போதைய அரசுக் கடன் 2.52 இலட்சம் கோடி ரூபாய் என்பது, ஒரு நபருக்கு சராசரியாக 35,000 ரூபாய் என்றும், 2011 ஆம் ஆண்டிலிருந்து 15,000 ரூபாய் கூடிவிட்டது என்றும் கூறினார். ஐந்து ஆண்டுகளில் பொருளாதார மாற்றத்தால் அனைத்தும் இரட்டிப்பாகும். அதற்காக நான் கடனை நியாயப்படுத்தவில்லை. தற்போது உள்ள கடன் அளவு, இன்றுள்ள சூழலில் இயல்பான ஒன்றுதான் என்றும், அளவுகோல்படி

அதிகமாக இல்லையென்றும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலத்தின் கடன் அளவு கட்டுக்குள்தான் உள்ளது என்பதையும், 25-7-2016 அன்று இம்மாமன்றத்தில் விரிவாக எடுத்துரைத்தேன். கடனுக்குச் செலுத்துகின்ற வட்டியும், அரசு செலுத்தக்கூடிய அளவில்தான் உள்ளது என்பதையும் தெரிவித்தேன்.

பெறுகின்ற இந்தக் கடன், மூலதனப் பணிகளுக்கு மட்டுமல்ல, வருவாய் செலவினத்தில் ஒன்றான மானியங்களுக்கும் மற்றும் நிதி உதவிக்கும் அதாவது, subsidy and transfer போன்றவற்றிற்கும் செலவிடப்படுகிறது. நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, இதில் பெரும்பகுதி உள்ளாட்சிகளுக்கு வழங்கும் நிதி. அதில் பெரும்பகுதி மூலதனப் பணிகளுக்கே செலவிடப்படுகிறது. அதாவது, 2015-2016 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிகரக் கடன் 31,099 கோடி ரூபாய். இதில் அரசின் மூலதனச் செலவு 18,994 கோடி ரூபாய். பிற நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிகரக் கடன் 1,648 கோடி ரூபாய். இதுவும் மூலதனச் செலவுதான். மீதமுள்ள 10,457 கோடி ரூபாய் கடன், வழங்கப்பட்ட மானியமும் நிதியுதவியுமான 57,211 கோடி ரூபாயில் அடங்கும். இந்த நிதியுதவியும், வருவாய் செலவினங்களில் உள்ள நலத் திட்டம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்குத்தான் செலவிடப்படுகின்றது. எனவே, இது விரயச் செலவு எனக் கருதத் தேவையில்லை. பொருளாதாரச் சூழல் மேம்படும்போது, வருவாய் உபரி ஏற்பட்டு, கூடுதல் மூலதனச் செலவு மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

மூலதனச் செலவு குறைவாக உள்ளதாகவும், திட்டமிட்ட அளவைவிடக் குறைவாக இருப்பதாகவும் ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதாவது, “actual growth of capital expenditure is far below the expectations. It should be higher to achieve target of vision document. There is consistent shortfall, in capital investment target, set forth in Budget projection each year” என தெரிவித்தார்.

மாநிலத்தைப் பொறுத்தவரை, பெரும்பகுதி செலவு, வருவாய் செலவினங்கள்தான். அதில் அதிக செலவினம் உள்ள காவல், கல்வி, சுகாதாரம், சமூக நலம் போன்றவற்றை மாநில அரசு அதன் நிதி ஆதாரத்தில்தான் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதில் பெரும்பாலும் நலத் திட்டங்களும் உள்ளன. மூலதனப் பணிகளுக்கு

நிதி போதுமானதாக இல்லாத காரணத்தால்தான் நாம் கடன் பெற வேண்டியுள்ளது. நமது மாநிலம் சந்திக்கின்ற இதுபோன்ற நிலை, பீகார், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு இல்லை. அவற்றுக்கு அதிக அளவில் மத்திய அரசால் நிதி வழங்கப்படுகிறது. இதனால் அந்த மாநிலங்களில் வருவாய் உபரியும் இருக்கிறது. அவை அதிக வரியையும் விதிப்பதில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசும்போதுகூட, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் நிதிப் பற்றாக்குறையைக் குறைத்ததாகக் கூறினார். அதே மாநிலங்கள் பெரும்பகுதி வருவாய் வரவை மத்திய அரசு உதவிமூலம் பெறுகின்றன என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும். ஆனால் நமது மாநிலம் கடன் பெற்றும், சொந்த வரி மூலமாக நிதி திரட்டியும்தான் பல ஆண்டுகளாக வளர்ச்சிப் பணிகளையும், நலத் திட்ட பணிகளையும் மேற்கொண்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், நம் கடன் அளவும் அதிகமாக உள்ளது. இந்த உண்மை நிலையையும் நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான், ஏன் கடன் அளவு தமிழ்நாடு, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் அதிகம் உள்ளது என்பது புரியும். மூலதனச் செலவிலும், மின்சாரக் கட்டமைப்பிற்கு பெரும்பாலும் மின் பகிர்மான கழகத்தாலும், குடிநீர் கட்டமைப்பிற்கு, உள்ளாட்சி அமைப்புகளாலும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாலைகள், நீர் ஆதாரம், கட்டடங்கள் போன்றவற்றுக்கு மாநில மூலதனச் செலவு அதிக அளவில் மேற்கொள்ளப்படுகிறது. இவற்றுக்கு போதுமான அளவு தற்போது நிதி ஒதுக்கி செலவிடப்படுகிறது. நிதிநிலை மேம்படும்போது கூடுதல் செலவு செய்ய வாய்ப்பு ஏற்படும்.

*முற்பகல் 10—55*

மத்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கையில், வட்டி செலவு அதிகரித்து, வருவாய் செலவு அதிகம் ஏற்படும் மாநிலங்களில் வளர்ச்சி பாதிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாக ராஜன் சுட்டிக்காட்டினார். இது பொதுவான பொருளாதார அடிப்படைக் கருத்துதான். ஆனால், இந்த மந்த சூழலில், அரசுக்கு உள்ள வழி என்ன? ஒன்று, வரி வருவாயைக் கூட்ட வேண்டும். அதாவது, புதிய வரியையோ, உள்ள வரி அளவையோ உயர்த்த வேண்டும்; அல்லது, வருவாய் செலவினத்தைக் குறைக்க வேண்டும். அதேசமயம், அரசு தனது

2016 ஜூலை 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

செலவை அதிகரித்தால்தான், பொருளாதாரத்தை மீண்டும் தூண்டிவிட வாய்ப்பு ஏற்படும். இதில் நலத் திட்டங்களும், மனித வள மேம்பாடும் முக்கியமான பணிகள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதற்கு மாநில அரசு கூடுதல் செலவை மேற்கொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களது தலைமையிலான இந்த அரசு, கவனமுடன் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள், நிதிநிலை பற்றி ஏழு கேள்விகளை எழுப்புவதாகவும், அதற்குரிய பதிலை எதிர்பார்ப்பதாகவும், இங்கு தெரிவித்தார். அவர் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு நான் ஏற்கெனவே அளித்த விளக்க உரையில் பதில் இருக்கிறது என்றாலும், அந்த கேள்விகளுக்கு குறிப்பான பதிலையும் அளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

முதலாவதாக, பெட்ரோல் விலை குறைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள வரி இழப்பைச் சமாளிக்க, இந்த அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஒரு கேள்வியை எழுப்பினார். நடப்பாண்டில், பொருளாதார தேக்க நிலை மாறி, பொருளாதார வளர்ச்சி அதிகரிக்க, பொதுவான அறிகுறிகள் தென்படுகின்றன. அதனால்தான் நம் மாநிலத்தில் உற்பத்தித் துறையின் வளர்ச்சியும் அதிகரித்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசும், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, பல்வேறு நல்ல நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், தொலைநோக்குத் திட்டம் 2023-ன்படி, பல்வேறு கட்டமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டும், தொடங்கப்படும் நிலையிலும் உள்ளன. இவை பெரும்பாலும் அரசு மூலதனமாகவும், அரசு-தனியார் பங்களிப்புடனும் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடர்ந்து, தனியார் முதலீடுகளும் ஈர்க்கப்பட்டு வருகின்றன. சிறு, குறு தொழில்களிலும் போடப்பட்ட பல ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் பொருளாதார சூழ்நிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றன எனக் கருதுகிறோம்.

அதன் அடிப்படையில்தான், 2015-2016 ஆம் ஆண்டு கணக்குப்படியான வரி வருவாயில், சுமார் 12.50 சதவீத வளர்ச்சியைச் சேர்த்து, 2016-2017-ல் வரி வருவாய் கணிக்கப்பட்டுள்ளது. இது மேலும் உயருமேயானால், அந்தக் கூடுதல் நிதி ஆதாரங்கள்மூலம், வருவாய்ப் பற்றாக்குறை குறையும்.

இது இயல்பான கணிப்பு அளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், வருவாயைக் கூட்டி, செலவைக் குறைத்து மதிப்பிட்டு, நிதிப் பற்றாக்குறையை குறைத்துக் காட்டவில்லை என்றும், அதற்கான அவசியம் மாண்புமிகு அம்மா அவர்களது அரசுக்கு இல்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறேன். இது தவிர, வருவாய் அல்லாத இனங்களிலும், குறிப்பாக Beach Mineral போன்றவற்றில், வருவாயை அதிகரிக்க, அரசே அந்தக் கனிம வளத்தைப் பிரித்து விற்கும் பொறுப்பை ஏற்கும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அது சம்பந்தமான அறிவிப்பு, ஆளுநர் உரையிலும் இடம் பெற்றுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகளிலும், கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. இது ஒருபுறம் இருக்க, வருவாய் பற்றாக்குறையைக் குறைக்கவும், செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தொடர்ந்து பல்வேறு நல்ல பல நடவடிக்கைகளை எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடன் அளவு 2.52 இலட்சம் கோடியாக உயர்ந்துவிட்டது என்றும், இதனால் அதிகரிக்கும் வட்டிச் சுமையைச் சமாளிக்க அரசு என்ன செய்யப்போகிறது எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் 6,353 கோடி ரூபாய் கடனை அரசே ஏற்றுக்கொண்டதன் காரணமாகவும், கடன் அளவும் வட்டிச் சுமையும் அதிகரித்துள்ளது. எனினும், இது நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டத்தின் வரையறைக்குள் இருப்பதால், அரசுக்குக் கடனையும் வட்டியையும் செலுத்தும் திறன் உள்ளது என்றும், அதனை தவணை தவறாமல் செலுத்தி வருகின்றது என்றும், ஏற்கெனவே தெளிவுபடுத்தினேன். கடனைக் குறைக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் தற்போதைய பொருளாதார மந்த நிலையில், மாநில அரசு கடன் பெற்றுத்தான் நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்ய

வேண்டியுள்ளது. வருங்காலத்தில் இத்தகைய நிலை மாறும் என்று நான் நம்புகிறேன்.

முற்பகல் 11—00

அடுத்தபடியாக, திருத்த மதிப்பீடுகளில் உள்ள நிதிப் பற்றாக்குறை மற்றும் வரி வருவாய் ஆகியவற்றை இடைக்கால நிதிநிலை அறிக்கையோடு ஒப்பிட்டுப் பேசினார்கள். இடைக்கால நிதிநிலை அறிக்கையை தயாரிக்கும்போது 2015-2016 ஆம் ஆண்டில் கணக்குகள் முடிவு செய்யப்படவில்லை. அதனால், 2015-2016 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளின் அடிப்படையில்தான் வருவாய் வரவுகளும், நிதிப் பற்றாக்குறையும் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் கணக்கிடப்பட்டுள்ளன.

2015-2016 ஆம் ஆண்டின் கணக்குகள் இறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில், வரி வசூல் போக்கினைக் கணக்கில் கொண்டு, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் தற்போது 96,531 கோடி ரூபாய் வரி வருவாய் என இருந்ததை, திருத்த மதிப்பீடுகளில் 90,962 கோடி ரூபாயாக 2016-2017-ல் வரி வருவாய் கணிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கணிப்புகள் சீராகவும், சரியாகவும் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கில்தான் தற்போதுள்ள விவரங்களின் அடிப்படையில், வரி வருவாய் மறு கணிப்பு செய்யப்பட்டுள்ளது. வருவாய் வரவு இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட நிலையில், தேர்தல் அறிக்கையின்படி அறிவித்த சில புதிய திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியையும் வருவாய் செலவினத்தில் சேர்த்து, அதற்கேற்ப வருவாய் பற்றாக்குறை இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 9,154 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்டதை மாற்றி, திருத்த மதிப்பீடுகளில் 15,854 கோடி ரூபாயாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள வேறுபாடு 6,500 கோடி ரூபாய் வரி வருவாயின் அளவிலும், வருவாய் செலவின கணிப்புகளிலும் ஏற்பட்ட மாற்றத்தினால்தான் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் புதிய வரிகள் எதையும் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு விதிக்கவில்லை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதனடிப்படையில், சில மூலதனச் செலவுகளிலும் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்த விளக்கங்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சந்தேகங்களைத் தீர்க்க போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இதுதவிர, மத்திய நிதி அமைச்சகம் மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களைத் தருவதாக மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி ராஜ்யசபையில் கூறியதாகவும், ஆனால், மாநில அரசோ, நிதி ஆதாரங்களை மத்திய அரசு குறைத்துவிட்டதாக கூறுகிறது எனக் குறிப்பிட்டு, இதில் எது உண்மை என மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு வினா எழுப்பியுள்ளார். இதுகுறித்த விளக்கத்தை ஏற்கெனவே இங்கு நான் தெரிவித்துவிட்டேன். மேலும், நிதி வழங்குவது பற்றி 14-வது நிதிக் குழு பரிந்துரையை மத்திய அரசு செயல்படுத்தியதால் ஏற்பட்ட சில மாற்றங்களால் தமிழ்நாடு எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதை தெளிவுபடுத்தவே இதை நான் கூறுகிறேன். 2015-2016 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு கீழ்க்கண்ட மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது:

மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வின் அளவு, மத்திய அரசின் வரி வருவாயில் 32 சதவீதத்திலிருந்து, 42 சதவீதமாக உயர்த்தப்பட்டது. அதேவேளையில் மத்திய அரசின் 8 திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன. மத்திய அரசு பல்வேறு திட்டங்களுக்கான நிதிப் பகிர்வு முறையில் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. உதாரணமாக, தேசிய வேளாண் திட்டத்தில் 100 சதவீதம் மத்திய அரசு மானியம் என்று இருந்ததை, 60 சதவீதமாகக் குறைத்து, மீதமுள்ள 40 சதவீதத்தை மாநில அரசே ஏற்க நேரிட்டது. ஊரக வீட்டு வசதி திட்டத்தில் மத்திய, மாநில அரசின் பங்கு 75:25 ஆக இருந்தது; அது 60:40 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, பல திட்டங்களில் மத்திய அரசின் பங்கு குறைக்கப்பட்டுள்ளதால், அதை ஈடு செய்ய மாநில அரசு கூடுதல் நிதிச் சுமையை ஏற்க நேரிட்டது. இந்த மாற்றங்களால் மாநில அரசுக்கு ஆண்டுக்குக் கூடுதலாக 2,600 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

மத்திய அரசின் முக்கிய திட்டங்களான தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், வறுமை ஒழிப்புத் திட்டம் போன்ற திட்டங்களுக்கான மத்திய அரசின் ஒட்டுமொத்த நிதி குறைக்கப்பட்டுவிட்டது. உதாரணமாக, தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்கு 2014-2015 ஆம் ஆண்டில் இந்தியா முழுமைக்கும் மத்திய அரசு திருத்த மதிப்பீடுகளில் ஒதுக்கிய நிதி, 10,890 கோடி

ரூபாய். ஆனால், 2015-2016 ஆம் ஆண்டில் திருத்த மதிப்பீடுகளில் இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 4,262 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு நாட்டின் முழுமைக்கும் 2014-2015 ஆம் ஆண்டில் ஒதுக்கிய நிதி 9,954 கோடி ரூபாய். அதேசமயத்தில் 2015-2016 ஆம் ஆண்டில் நாடு முழுமைக்கும் இத்திட்டத்திற்கு ஒதுக்கிய நிதி 4,500 கோடி ரூபாய். இந்தத் திட்டங்களில் மத்திய அரசின் ஒதுக்கீடு குறைந்ததால், தமிழ்நாட்டிற்குக் கிடைத்து வந்த ஒதுக்கீடும் குறைந்துவிட்டது. எனவே, இந்தத் திட்டங்களை மாநில அரசு தொய்வின்றி தொடர்ந்து செயல்படுத்திட, தனது நிதி ஆதாரங்களைக் கூடுதலாகச் செலவிட வேண்டியுள்ளது.

முற்பகல் 11—05

மத்திய நிதி பகிர்வில், 32 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக உயர்த்திய அதேவேளையில், மாநிலங்களுக்கு இடையேயான நிதி பகிர்வில் தமிழ்நாட்டிற்கான பங்கு, பொது வரியில் 4.969 சதவிகிதத்திலிருந்து, 4.023 சதவிகிதமாகவும், சேவை வரியில் 5.047 சதவிகிதத்திலிருந்து, 4.104 சதவிகிதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், 42 சதவிகிதமாக உயர்த்தியதில், கூடுதலாக தமிழ்நாட்டிற்கு ஆண்டுக்கு கிடைத்திருக்க வேண்டிய 6000 கோடி ரூபாய் நிதி, கிடைக்க வழியில்லாமல் போய்விட்டது. இதை மத்திய அரசு குறைத்துவிட்டதாக குறை சொல்லவில்லை. இந்த மாற்றங்கள், 14-வது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, மத்திய அரசு எடுத்த முடிவு.

இந்த முடிவால் தமிழ்நாடு போன்ற, ஒரு சில மாநிலங்கள்தான் பாதிக்கப்பட்டன. அதனால்தான், மத்திய அரசிடம் இந்த இழப்பினை ஈடு செய்ய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு, 2015-2016 ஆம் ஆண்டில் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு, நிதி வழங்கும்போது, 552 கோடி ரூபாயை மத்திய அரசும் வழங்கியது.

14-வது நிதிக் குழு பரிந்துரைத்த நிதிப் பகிர்வால், பல மாநிலங்கள் பயன் பெற்றாலும், தமிழ்நாடு போன்ற ஒரு சில மாநிலங்கள் பெரும் பாதிப்பைச் சந்திக்க நேரிட்டன என்பது உண்மை. நமது மாநிலம் தற்போது சந்தித்து வரும் நிதி

பற்றாக்குறைக்கு இதுவும் ஒரு மிகப்பெரிய காரணம் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிற்கு மத்திய வரி பகிர்வின்மூலம் 2014—2015 ஆம் ஆண்டில் கிடைத்த வரி அளவு 16,824 கோடி ரூபாயாகவும், 2015—2016 ஆம் ஆண்டில் 20,353 கோடி ரூபாயாகவும் உள்ளது. ஆனால், மத்திய அரசின் நிதிப் பகிர்வில், 32 சதவிகிதத்திலிருந்து 42 சதவிகிதமாக உயர்த்தியதன் அடிப்படையில், நமக்கு ஏற்கெனவே கிடைத்து வந்த பகிர்வின் அளவு கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், தமிழ்நாட்டிற்கு 26,000 கோடி ரூபாய், அதாவது கூடுதலாக 6,000 கோடி ரூபாய் கிடைத்திருக்கும். அதைத்தான் நாம் நிதி இழப்பாகக் கருதுகிறோம் என்பதை இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி விஜயதரணி, திரு. எழிலரசன் ஆகியோரும் நிதிக் குறியீடுகள் பற்றிய கருத்துகளையே மீண்டும் தெரிவித்தார்கள். நான் ஏற்கெனவே அளித்த பதிலுரை அவர்களின் கருத்துகளுக்கும் பதிலாக அமையும்.

விவாதத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி அவர்கள் கூட, கடந்த 5 ஆண்டுகளில் இருந்த மாநில வரி வருவாய், வருவாய் வரவு ஆகியவற்றின் வளர்ச்சி அளவைப்பற்றி பேசினார். இந்த புள்ளிவிவரங்களை மறுக்கவில்லை. ஒவ்வோர் ஆண்டும் வரி வருவாயும் உயரும், செலவுகளும் உயரும். பொருளாதாரம் வளர்ச்சியடையும்போது, நிதிப் பற்றாக்குறை மற்றும் கடன் அளவுகள் உயர்ந்தாலும், மாநில உற்பத்தி மதிப்பில், அது உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் போக்குக்கு ஏற்ப, இதில் சில நேரம் கூடலாம். சில நேரம் குறையலாம். அதன் அடிப்படையில், ஆண்டுவாரியாக புள்ளிவிவரக் கணக்குகளைக் காட்டி விவாதம் செய்ய வேண்டுமென்றால், அது முடிவில்லாமல் போய்க் கொண்டே இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு புள்ளிவிவரங்களைப் பார்க்கவேண்டும் என்பதுதான்.

தற்போதைய சிரமமான நிலை மாற, ஆக்கபூர்வமான அறிவுரைகளை தெரிவித்தால், அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராகவே இருக்கிறோம். இந்த நிலையை எப்படி சமாளிப்பது

2016 ஜூலை 29] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

என்றும், பொருளாதார வளர்ச்சியை எப்படி அதிகரிப்பது என்றும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு தீவிரமாக ஆய்வு செய்து, நல்ல பல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை மட்டும் மீண்டும் இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவாதத்தில் இறுதியாகப் பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள், வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை, கடன் போன்றவை பற்றி ஒரு விரிவான விளக்க உரையை இங்கே ஆற்றினார். அவருக்கே உள்ள ஒரு பாணியில் சில கேள்விகளையும் கேட்டு, பதிலையும் அவரே அளித்தார். அவர் பேசியபோது வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை ஆகியவை ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்து வருவதாகவும், நிதிப் பற்றாக்குறை என்பதே தவறானது அல்ல என்றும், ஆனால், இந்த அரசு பற்றாக்குறையைப் போக்க வருவாய் வழிகளைப் பெருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், வருவாய் வரவு ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்துள்ளது. ஆனால், நாம் எதிர்பார்த்த அளவு அது உயரவில்லை. அதற்கான காரணத்தையும் விரிவாக இங்கு விளக்கினேன்.

மாநில வரி வருவாயின் போக்கு அரசால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையைச் சீர் செய்ய உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையையும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதை மீண்டும் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசும்பொழுது மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களைவிட, நமது மாநிலத்தில் நிதிப் பற்றாக்குறை அதிகமாக உள்ளது எனக் குறிப்பிட்டார். இது ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், ரிசர்வ் வங்கியின் அறிக்கை அடிப்படையில் குறிப்பிட்டுள்ளதையே, இவரும் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதுகிறேன்.

*முற்பகல் 11—10*

Reserve Bank அறிக்கையின்படி, மகாராஷ்டிர மாநிலத்தின் நிதிப் பற்றாக்குறை, நிதிநிலை அறிக்கை விவரப்படி குறைவாகக் காட்டப்பட்டு இருந்தாலும், இறுதிக் கணக்கின்படி திருத்த மதிப்பீடுகளில், நமது மாநிலத்தைவிட அதிகமாக இருந்தது

என்பதையும் ஏற்கெனவே நான் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன். தாது மணலை அரசே விற்பதன்மூலம், கூடுதல் வருவாயை ஈட்டலாம் என்பது பற்றி நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவித்தார். இது ஏற்கெனவே ஆளுநர் உரையில் அறிவிப்பு செய்யப்பட்டு, அதற்கான துவக்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. வரி அல்லாத வருவாய், குறிப்பாக சுரங்கத் தொழில்மூலம் பெறும் வருவாய் தமிழ்நாட்டில் குறைவாக உள்ளது என நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சத்திஸ்கர், மத்தியப்பிரதேசம், ஒடிசா போன்ற பிற மாநிலங்களை ஒப்பிடும்போது நமது மாநிலத்தில் அதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதைத்தான் அதில் குறிப்பிட்டு, இதிலிருந்து ஒரு பெருத்த வருவாயைக் கூடுதலாகப் பெற இயலாது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடன் அளவு உயர்ந்து வருவது பற்றியும், வட்டி செலுத்துவதற்கான பொறுப்புகள் பற்றியும் இங்கே குறிப்பிட்டார். இதற்கான விரிவான விவரங்களை ஏற்கெனவே அளித்துள்ளேன். அதற்கு மேல் கூடுதல் விவரம் தேவை இல்லை என்றே நான் கருதுகிறேன். அவர் கூறியதுபோல், கடன் வாங்குவது தவறு அல்ல. அது அளவோடு இருக்க வேண்டும் என்பதில் எங்களுக்கும் மாற்றுக் கருத்து இல்லை. நிதிப் பற்றாக்குறை, மாநில பொருளாதார உற்பத்தி மதிப்பில் 2016—2017—ல் 2.96 சதவிகிதமாக உள்ளது என்றும், அது அடுத்த ஆண்டு 3.34 சதவிகிதமாக உயரும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது பற்றி இங்கே அவரும் குறிப்பிட்டார். இதற்கான விரிவான விளக்கத்தை நான் ஏற்கெனவே தெரிவித்துவிட்டேன்.

2013-2014 ஆம் ஆண்டு CAG அறிக்கையில் வருவாய் பற்றாக்குறை குறைத்து காட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள விவரத்தைச் சுட்டிக்காட்டினார். கடந்த தி.மு.க. ஆட்சியில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை மூலதனக் கணக்கில் வைக்கப்பட்டது. இதே வழிமுறையைப் பின்பற்றித்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பசுமை வீடுகள் திட்டத்திற்கும், மூலதனக் கணக்கில் காட்டப்பட்டது. அதை மூலதனக் கணக்கின்கீழ் கொண்டுவரக் கூடாது என்றும், வருவாய் கணக்கில்தான் கொண்டுவர வேண்டும் என்றும் தெரிவித்து, அதனால் வருவாய்ப் பற்றாக்குறை இந்த அளவுக்கு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாக, CAG அறிக்கையில்

தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 2014-2015 ஆம் ஆண்டில் இந்தச் செலவு வருவாய்க் கணக்கில் கொண்டுவரப்பட்டது. இது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகைக்கும் பொருந்தும் என்பதையும், இவை கணக்குகளில் உள்ள interpretation வேறுபாடுகளே தவிர, பெரிய தவறாகக் கருதிவிட முடியாது என்பதையும் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இது தவிர, 2013-2014 கணக்குகளில், துறைகளுக்கு ஒதுக்கப்பட்ட 1,187.55 கோடி ரூபாய் அளவிற்கு திரும்ப ஒப்பளிப்பு செய்யப்பட்டது என்றும், அவை குறிப்பாக பள்ளிக் கல்வித் துறையிலும், ஆதி திராவிடர் நலத் துறையிலும், நிகழ்ந்ததாகவும், இதைத் தவிர்த்திருக்கலாம் என்றும் CAG அறிக்கையைச் சுட்டிக்காட்டி இங்கே பேசினார். இவை ஆண்டுதோறும் எழுப்பப்படும் தணிக்கைக் கருத்துகள்தான். எந்தத் துறையிலும், தேவைப்படும் நிதியைத் துல்லியமாக மதிப்பிட்டு செலவு போக, மீதியே இல்லாமல் பயன்படுத்த முடியாது. மேலும், மிகை ஒப்பளிப்பு பற்றியும் பேசினார். இதற்கான கேள்வியை எழுப்பிவிட்டு, அதற்கான பதிலையும் அவரே சொல்லிவிட்டார். ஏனெனில், ஒரு திட்டத்தைத் தீட்டி அனுமதி வழங்கப்பட்டபின் சில காரணங்களால் கூடுதல் நிதி தேவைப்படும்பொழுது, திருத்த மதிப்பீட்டில் கூடுதல் நிதி வழங்கப்படும். இதைக் கணக்கில்கொண்டு, ஆண்டு இறுதியில் செய்த செலவின் அடிப்படையில் திரும்ப ஒப்பளிப்பு செய்யும்பொழுது, இது கூடுதல் ஒப்பளிப்பாகத் தெரியும். பல ஆண்டுகளாக அமைச்சராக இருந்த அவர், இந்த விவரங்களை எல்லாம் நன்கு தெரிந்துகொண்டு, அதை ஒரு பெரிய பிரச்சினையாக எழுப்பியுள்ளார். உதாரணமாக, தி.மு.க. ஆட்சிக் காலத்திலும், 2010-2011 ஆம் ஆண்டில், இதேபோன்று 778.94 கோடி ரூபாய் கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாக CAG அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும், இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுபோன்ற நிகழ்வுகளை நிருவாகத்தில் சில சமயங்களில் முழுமையாகத் தவிர்க்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011-2012 ஆம் ஆண்டில் கிராமப்புற குடிநீர்த் திட்டங்களுக்காக மத்திய அரசு வழங்கிய நிதியை சரிவரப் பயன்படுத்தாததால், அடுத்த ஆண்டிற்கு, அதாவது, 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதியை, தமிழ்நாட்டிற்கு வழங்க, மத்திய அரசு

மறுத்துவிட்டதாகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூறினார்கள். 2011-2012 ஆம் நிதியாண்டில், மத்திய அரசின்மூலம் 350.24 கோடி ரூபாய் தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் பெறப்பட்டது. இதில் 58.33 கோடி ரூபாய் மார்ச் மாதத்தில் பெறப்பட்டபோதிலும், 286.04 கோடி ரூபாய், அதாவது 82 சதவிகிதம், 2011—2012 ஆம் ஆண்டிலேயே செலவிடப்பட்டது. அந்த நிதியாண்டில் 64.02 கோடி ரூபாய் மட்டும் மீதி கையிருப்பாக இருந்தது.

2011-2012 ஆம் ஆண்டில், தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியில், 60 விழுக்காட்டிற்கு மேல் பயன்படுத்தி திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தியதன் காரணமாக, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் 168.77 கோடி ரூபாய் ஊக்கத் தொகையாகவும், இயற்கை இடர்பாடு நிதியாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாகப் பெறப்பட்டது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11—15

மத்திய அமைச்சர் தலைமையில் 24-5-2012 மற்றும் 25-5-2012-ல் நடந்த மாநில அமைச்சர்கள் மற்றும் மாநில அரசின் செயலாளர்களின் கருத்தரங்கில், தமிழ்நாடு அரசின் செயல்பாட்டை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்றும் வருடாந்திரக் கடைசியில் விடுவிக்கப்படும் நிதியைச் செலவழிப்பதற்கு மாநில அரசைப் பொறுப்பாக்காமல், அடுத்த ஆண்டிற்கான முதல் தவணையை அனைத்து மாநிலங்களுக்கும் 5-6-2012-க்குள் விடுவிக்க வேண்டும் எனக் கூறியிருந்தார். 2011-2012 ஆம் ஆண்டு இறுதியில் கையிருப்புத் தொகை 236.59 கோடி ரூபாய் இருந்ததாகவும், அதனால் 2012-2013 ஆம் ஆண்டுக்கு விடுவிக்கப்பட வேண்டிய முதல் தவணைத் தொகை 138.58 கோடி ரூபாயை விடுவிக்கவில்லை என மத்திய அமைச்சர் திரு. ஜெயராம் ரமேஷ், 4-7-2012 அன்று கடிதத்தில் எழுதியிருந்தாலும், இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்மை நிலவரத்தை எடுத்துக்கூறி, நிதியை விடுவிக்க கடிதம் எழுதியதன் அடிப்படையில், 2012 ஜுலை மாதத்தில் முதல் தவணைத் தொகையாக 132.32 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு விடுவிக்கப்பட்டது. அந்த ஆண்டிற்கான பணிகளும்

சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டன. தேசிய ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் செயல்பாடு குறித்து மாநிலங்களுக்கிடையே தரவரிசை Results Framework Document-ல் ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசால் வெளியிடப்பட்டு வருகிறது. அதில் 2011-2012-க்கான அறிக்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோல், ஒவ்வோர் ஆண்டும் மத்திய அரசு விடுவித்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தியதோடு, கூடுதல் நிதி பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதேயன்றி இதுவரை இத்திட்டத்தில் விடுவித்த தொகை செலவழிக்கப்படாமல் இருந்ததில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தவாறே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 31-3-2016 அன்று நிலுவையிலிருந்த குறுகிய, நடுத்தர கால மற்றும் நீண்ட காலக் கடன்களைத் தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் இதுகுறித்துப் பேசியபோது, இத்தொகையை ஐந்தாண்டு காலத்தில் பிரித்து அளிப்பதால், கூட்டுறவு அமைப்புகளால் அரசு அறிவித்தவாறு 6,000 கோடி ரூபாய் அளவிலான வேளாண் கடன்களைத் தரமுடியாமல் போகக்கூடும் என்ற ஐயப்பாட்டை எழுப்பினார். இதுகுறித்து விளக்கமளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு தள்ளுபடி செய்த மொத்தத் தொகை 5,780.92 கோடி ரூபாய் ஆகும். கூட்டுறவு அமைப்புகள் விவசாயக் கடன்களை அளிப்பதற்கு, மூன்று விதமாக நிதி திரட்டப்படுகிறது. ஒன்று, ஏற்கெனவே அளிக்கப்பட்ட கடன்களையும், வட்டியையும் வசூல் செய்வது; இரண்டு, நபார்டு வங்கியிடமிருந்து இதற்காகப் பெறப்படும் refinance உதவி; மூன்று, அந்த அமைப்புகளின் வைப்பீடுகள் உள்ளிட்ட சொந்த நிதி. தற்போது தள்ளுபடி செய்யப்பட்ட 5,780.92 கோடி ரூபாயில், நபார்டு வங்கிக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய தொகையும், கூட்டுறவு அமைப்புகளின் சொந்த நிதியும் அடங்கும். இதில் நபார்டு வங்கிக்குத் திருப்பிச் செலுத்துவதற்காக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 1,680.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை நபார்டு வங்கிக்குத் திருப்பிச் செலுத்திய பின்னர், 2016-2017 ஆம்

ஆண்டிற்கான 6,000 கோடி ரூபாய் பயிர்க் கடனை கூட்டுறவு வங்கிகள் வழங்க, நபார்டு வங்கியிடமிருந்து இந்த ஆண்டு இயல்பாகப் பெறப்படும் 1,770 கோடி ரூபாய் நிதியுதவியுடன், கூடுதலாக 1,480 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 3,250 கோடி ரூபாயை வழங்க, நபார்டு வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. இவ்வாறு நபார்டு வங்கியின் உதவி, அரசு வழங்கும் நிதி மற்றும் தமது சொந்த நிதியைப் பயன்படுத்தி, உறுதியளிக்கப்பட்டவாறே 6,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் கூட்டுறவு அமைப்புகளால் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11—20

மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் கூறும்போது, சென்னை கூவம் ஆற்றில் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தில், மத்திய அரசு 105 கோடி ரூபாய் ஒதுக்கியதாகவும், இதற்கு சுற்றுச்சூழல் அனுமதி அளிக்க கூட்டப்பட்ட மத்திய அரசின் கூட்டத்திற்கு, தமிழக அரசிலிருந்து உயர் அதிகாரிகள் யாரும் கலந்து கொள்ளாததால், திட்டம் கைவிடப்பட்டு, நிதியைப் பயன்படுத்த மாநில அரசால் இயலவில்லை எனவும் குறிப்பிட்டார். இத்திட்டத்திற்கு மத்திய அரசு நிதி எதுவும் ஒதுக்கவில்லை என்பதே உண்மை. மாநில அரசுதான் 604 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தீட்டி, சுற்றுச்சூழல் அனுமதிக்கு உட்பட்ட பகுதிக்கு மட்டும் 105 கோடி ரூபாய்க்கு பணிகள் மேற்கொள்ள மத்திய அரசின் அனுமதி கோரியிருந்தது. தமிழ்நாடு கடற்கரை மேலாண்மை குழுமத்தின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய அரசின் சுற்றுச்சூழல் ஆய்வுக் குழுமத்தின் (Environmental Appraisal Committee) ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கூட்டம்தான் ஏப்ரல் 27 மற்றும் 28 இல் நடைபெற்றது. உயர் தொழில்நுட்ப அலுவலர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். குழு, சில விவரங்களைக் கோரியது. இந்தக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை செயலரும் கலந்துகொண்டார். இக்கூட்டத்திலும், மேலும் சில விவரங்களைக் கோரியுள்ளனர். விரைவாக அனுமதி பெற்று, பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மத்திய அரசின் நிதியை, இதில் மாநில அரசு பெறத் தவறியது என்பது முற்றிலும் தவறான ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்கள் சொல்லி காற்று வருவதில்லை. தேனீக்கள் சொல்லி பூக்கள் மலர்வதில்லை. வானம் சொல்லி நிலவு வருவதில்லை. மேகம் சொல்லி மழையும் வருவதில்லை. கண்கள் சொல்லி காட்சிகள் வருவதில்லை. இவை யாவும் ஆண்டவன் சொல்லி அதுவாகவே நடப்பவை. அதுபோலவே, தமிழ்நாட்டை வளப்படுத்தும் நலத் திட்டங்களெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லி அரசு செயல்படுத்துபவை. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டங்கள் யாவும் மாண்புமிகு அம்மா அவர்களின் சிந்தனையில் பூத்து மக்களுக்காகவே அம்மா அவர்கள் அள்ளித் தந்தவை. அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற்றிடும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துத் தந்த திட்டங்கள் பற்றியும், அதற்கென அள்ளித்தந்த நிதி குறித்தும், இங்கு எடுத்துக்கூற வேண்டியது எனது மிகப்பெரிய கடமையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுய தொழில் தொடங்க தாட்கோ மூலம் மானியம் வழங்கி, எளியோரையும் வலியோராக மாற்றும் வல்லமை படைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி, தனி அக்கறை காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அக்கறையோடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்காக அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூபாய் 2,971 கோடியே 19 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"

என்று விவசாயி திரைப்படத்தில் பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். விவசாயிகள் யாரும் யாரிடமும் கையேந்த வேண்டிய நிலை இருக்கக்கூடாது என்பதற்காகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆறாம் முறையாக ஆட்சிப்பீடம் ஏறியதும் தனது முதல் கையெழுத்திலேயே விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகள் வழங்கிய 5,780 கோடி ரூபாய் அளவிலான பயிர்க்கடன், நடுத்தர காலக் கடன், நீண்ட காலக் கடன் என அனைத்து

கடன்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அள்ளித் தந்த தொகை ரூபாய் 6,941 கோடியே 26 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறறிவு மனிதர்கள்மீது அக்கறைபடாத ஆட்சியெல்லாம் இதற்கு முன்பு தமிழ்நாட்டில் நடந்திருக்கிறது. அவர்கள் ஐந்தறிவு கால்நடைகள்மீது அக்கறை செலுத்துவார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆனால், ஆறறிவு மனிதர்கள்மேல் அன்பு செலுத்துவது மட்டுமல்ல, எல்லா உயிர்களையும் சமமாக தன் சிந்தனையில் கொண்டிருக்கும் ஒரே முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கண்கலங்கி நிற்கும் ஏழைகள் கரையேற கறவை மாடு தந்தார். கிராமப்புற பெண்கள் பொருளாதார முன்னேற்றம் காண ஆடுகள் தந்தார். மீன்பிடி தடைக் காலத்திலும், மீன்பிடி குறை காலத்திலும் வழங்கிய நிதி உதவியை ரூபாய் 5,000 ஆக தனித்தனியே உயர்த்தி வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியாண்டில் கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூபாய் 2,054 கோடியே 45 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசிப்பதற்கு வீடில்லை. புசிப்பதற்கு உணவில்லை. உழைப்பதற்கு மனமிருந்தும் பிழைப்பதற்கு வழியில்லை. இதுதான் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் நிலையாக ஒரு காலத்தில் இருந்தது. வாழ்க்கையில் மற்றவர்களைப் போல உயர யாராவது வழிகாட்டமாட்டார்களா என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. அவர்களுக்கு வழிகாட்டிய வள்ளல் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) உலமாக்களுக்கு ஊதியத்தை உயர்த்திக்கொடுத்து, மிதிவண்டியும் கொடுத்து, ஹஜ் யாத்திரைக்கு மானியமும் கொடுத்து, கிருஸ்தவர்கள் ஜெருசலேம் செல்ல நிதியும் கொடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களது கனவை நனவாக்கி சிறுபான்மையினரின் காவல் அரணாக விளங்குபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள்

*அள்ளித்தந்தது ரூபாய் 1,047 கோடியே 65 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11—25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியில்லாத நிதிநிலை அறிக்கையால், அதைத் தொடர்ந்து வரும் நலத் திட்டங்களால் தமிழ்நாடே வலிமைபெறும் என்று மக்கள் வானளாவப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வாழ்த்த மனமில்லாத சிலரோ வம்பு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் பொருட்படுத்தாமல், அரசின் பொருளாதாரத்தை உயர்த்தி, வரி வருவாயைப் பெருக்கி, தமிழ்நாட்டை வளமாக்கிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.324 கோடியே 58 இலட்சம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான அரசுகள் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களின் மகிழ்ச்சியை, மன நிம்மதியை, மன நிறைவை, மாநிலத்தின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து வழங்குகிறார்கள். அனைத்துப் பிரிவினரும் பயன்பெறும்விதமாக கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்தும், அடிமட்டத்தில் உள்ளவர்கள் பொருளாதார வளர்ச்சி அடையவும், கடன் கொடுத்து கை கொடுக்கும் கருணை தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே கோபுரமாக விளங்கும் கூட்டுறவுத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூபாய் 2,406 கோடியே 95 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாடினான் மகாகவி பாரதி. அந்த நிலைமை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இல்லை. ஒவ்வொரு மாதமும் 1.90 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா அரிசி தந்து, பசிப் பிணி போக்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று பாரதி இருந்திருந்தால், பசியில்லாத

தமிழ்நாட்டை உருவாக்கிய அம்மாவைப் போற்றிப் புகழ்ந்திடுவோம் என்று பாடியிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று சொல்வார்கள். அம்மா உணவகங்கள் தந்து, தமிழர்களின் பசிப்பிணி போக்கி, உயிர் கொடுத்த தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அள்ளித் தந்த தொகை ரூ.6,215 கோடியே 69 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இசைக்கின்ற கானம் செவிகளுக்கு இன்பம்! இனிக்கின்ற கரும்பு நாவிற்கு இன்பம்! விரிகின்ற பூக்கள் விழிகளுக்கு இன்பம்! பொழிகின்ற மழையோ பூமிக்கு இன்பம்! மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிதான் தமிழர் வாழ்விற்கே இன்பம்! (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சியில் இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளியேற்றி, மின்மிகை மாநிலமாக மிளிர வைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமா? தமிழக மின்சாரத்தை பிற மாநிலங்களுக்கும் விற்கும் அளவுக்கு உயர்த்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். வீடுகளுக்கு 100 யூனிட் மின்சாரம் கட்டணம் இல்லாமல் வழங்கி, வரலாறு படைத்திருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். தமிழர்கள் இன்பமாக வாழ எரிசக்தித் துறைக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அள்ளிக் கொடுத்த தொகை ரூ.9,249 கோடியே 34 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பறக்கின்ற பறவை வானுக்கு அழகு! சுரக்கின்ற பால்தான் பசுவுக்கு அழகு! அணைக்கின்ற பாசம் உறவுக்கு அழகு! கொடுக்கின்ற குணம்தான் மாண்புமிகு புரட்சித் தலைவருக்கு அழகு! மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிதான் தமிழர் நல்வாழ்விற்கே அழகு! (மேசையைத் தட்டும் ஒலி)

பொங்கல் திருநாளில் விலையில்லா வேட்டி சேலை வழங்கி, நெசவாளர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர்களுக்கு கட்டணமில்லா மின்சாரம், கைத்தறிக்கு 200 யூனிட் ஆகவும், விசைத்தறிக்கு 750 யூனிட் ஆகவும், உயர்த்தி

வழங்கி, நெசவாளர் வாழ்க்கை வளத்தை மேம்படச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழர் வாழ்வை அலங்கரிக்க கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.174 கோடியே 27 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கின்ற படிப்பு அறிவுக்கு ஏற்றம், நினைக்கின்ற மனம்தான் நட்புக்கு ஏற்றம், செழிக்கின்ற வயல்தான் நெல்லுக்கு ஏற்றம், கொடுக்கின்ற செல்வம்தான் தர்மத்தின் ஏற்றம், மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சிதான் தமிழர் வாழ்விற்கே ஏற்றம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆரோக்கிய வாழ்வை தமிழ் மக்களுக்கு அளித்திட, ஏழை எளியோரும் உயிர்காக்கும் உயர் சிகிச்சை பெற்று நலமுடன் வாழ விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் வற்றாத ஜீவ நதிபோல் வாரிக் கொடுத்த தொகை ரூ.9,072 கோடியே 72 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த மகத்தான நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுக்கு தாகம் தீர்க்கும் குடிநீராகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் பாராட்ட மனதில்லாத சிலருக்கோ அது கானல் நீராகத் தெரிகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுக்கு வாசம் வீசும் பூவாகத் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்ட மனதில்லாத சிலருக்கோ அது காகிதப் பூவாகத் தெரிகிறது. இந்த நிதிநிலை அறிக்கை ஒன்றும் காகிதப் பூ அல்ல, மணக்கின்ற மல்லிகைப் பூ; (மேசையைத் தட்டும் ஒலி) மணம் பரப்பும் மகிழம்பூ. விலையில்லா மடிக் கணினி தந்து மாணவ, மாணவிகளின் கல்வித் தரம் செழித்திடச் செய்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சீரிய திட்டங்கள் பல செயல்படுத்தி, உயர் கல்வி மாணவர்களின் சேர்க்கை விகிதம் உயர்ந்திட காரணமானவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாணவச் செல்வங்கள் கல்வியால் மேன்மை பெறவேண்டும் எனும்

மாண்புமிகு அம்மா அவர்களின் உயரிய நோக்கத்திற்கு, கல்வித் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அள்ளிக் கொடுப்பதே ஆதாரமாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பள்ளிக் கல்வித் துறைக்கு 24,129 கோடியே 86 இலட்சம் ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறைக்கு 3,679 கோடியே 1 இலட்சம் ரூபாயும் (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தம் 27,808.87 கோடி ரூபாய் வள்ளல் மனதுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்கு ஆண்டவன் வழங்கிய அட்சயப் பாத்திரம்தான் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அட்சயப் பாத்திரம் எப்படி உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடு பார்க்காமல் பசியாற்றுமோ, ஜாதி, மதம் போன்ற வேறுபாடுகள் பார்க்காமல் பசியாற்றுமோ, அதைப்போல ஆளுங்கட்சித் தொகுதிகள், எதிர்க் கட்சித் தொகுதிகள் என்ற பாகுபாடு இல்லாமல் 234 தொகுதிகளுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நலத் திட்டங்களை வாரி வாரி வழங்குகின்ற அன்பு நிறைந்த அட்சயப் பாத்திரம்தான் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா எனும் அட்சயப் பாத்திரம் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்காக அள்ளிக் கொடுத்த தொகை ரூ.8,486 கோடியே 76 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு எப்படியெல்லாம் சீரழிந்து கிடந்தது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நீதிபதிகள் தாக்கப்பட்டதையும், பத்திரிகையாளர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதையும் மக்கள் இன்னும் மறந்து விடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக அமர்ந்த பின்புதான், மாநிலத்தில் அமைதி வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனதில் நிம்மதி வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) காவல் துறைக்கே சுதந்திரம் வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு”

என்கிறது திருக்குறள். குளத்தில் தண்ணீர் எவ்வளவு உயரமோ, மலர்களும் அவ்வளவு உயரத்தில் இருக்கும். உள்ளம் எவ்வளவு

*உயரமோ, மனிதர்களும் அவ்வளவு உயரத்தில் இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் உள்ளம் உயர்ந்தது, அதனால் புகழின் உயரத்தில் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து முதல்வராகவே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உச்சியில் ஏற்றி வைத்த மக்கள், மன நிம்மதிகொள்ள காவல் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.6,102 கோடியே 95 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-35*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை வளர்ச்சிக்காக உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடு கொண்டுவந்த முதலமைச்சர் என்ற பெருமை அகில இந்தியாவிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எவருக்கும் இல்லை. அதையும் குறை சொன்னவர்கள்தான், இந்த நிதிநிலை அறிக்கையை குறை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் குறை சொல்வதைப் பார்த்தால் எனக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. 'அங்காடிக் கடைக்காரன் சங்கீதம் பாடினால், பச்சை மிளகாய், பாகற்காய் என்றுதான் பாடுவான்' என்பதுபோல, எதிர்க் கட்சியான தி.மு.க.வினர் எதிர்க் கட்சியானாலே இப்படித்தான் அறிக்கை விடுவார்கள்போல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விடும் வெத்துவேட்டு அறிக்கைகளால், நிதிநிலை அறிக்கையின் சிறப்பையோ, மாண்புமிகு அம்மா அவர்களின் புகழையோ குறைத்துவிட முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையிலே ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எவருக்கும் குறையாமல் கொடுக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள் தொழில் துறைக்கும் குறையில்லாமல் கொடுத்த தொகை ரூபாய் 2,104 கோடியே 49 இலட்சம்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும் சரி, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் குடும்பத்தோடு குதூகலமாக முதலில் சுற்றிப்பார்க்க ஆசைப்படுவது தமிழ்நாட்டைத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் காரணம், உலகப் புகழ்பெற்ற தமிழகச் சுற்றுலாத் தலங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்திய சுற்றுலாத்*

திட்டங்கள்தான். மாண்புமிகு அம்மா அவர்களின் சிறப்பை உணர்ந்தவர்களுக்கு வெற்றியும் கிடைக்கும், வேண்டியவை எல்லாமும் கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளும் தமிழ்நாட்டைச் சுற்றிவந்தால் மனமெல்லாம் மகிழ்ச்சி கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ள தொகை ரூபாய் 170 கோடியே 26 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்தியாவில் மட்டுமல்ல, உலகளவிலேயே பொருளாதாரத் தேக்கநிலை நிலவுகிறது. அப்படியிருந்தும்கூட இந்திய பொருளாதார வளர்ச்சியைவிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கூடுதல் வளர்ச்சி அடைந்திருக்கிறது. இது மாண்புமிகு அம்மா அவர்களின் அறிவுத் திறனைக் காட்டுகிறது, ஆட்சித் திறனைக் காட்டுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று பொருளாதார வல்லுநர்கள் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நகர்ப்புற வளர்ச்சியை மேம்படுத்த வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடும், பாதுகாப்பான குடிநீரை அனைவருக்கும் வழங்கிடவும், மாண்புமிகு அம்மா அவர்கள் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக அள்ளித் தந்த தொகை ரூபாய் 11,820 கோடியே 2 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றைப் படித்தவர்கள் பலர். தமிழகத்தில் வரலாறு படைத்தவர்கள் வெகு சிலர். தமிழக வரலாற்றை மாற்றி எழுதும் வல்லமை பெற்றவர் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) நானிலம் போற்றும் நாவன்மை, அறிவுடையார் போற்றும் நற்குணங்கள், நாடே போற்றும் நல்லாட்சி, சதிகளை முறியடித்து, சாதனை படைத்த வீரத்தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்றத்தில் உறுதியான வழக்காடி, காவேரி நதி நீரில் தமிழகத்தின் உரிமையை மீட்டுத் தந்தும், (மேசையைத் தட்டும் ஒலி) முல்லைப் பெரியாறு அணை நீர் மட்டத்தினை உயர்த்தியும், உழவர் உள்ளமெல்லாம் கோலோச்சும் தெய்வம் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் பொதுப் பணித் துறையின் பாசனத்திற்காக வழங்கியுள்ள தொகை ரூபாய்

*3,406 கோடியே 69 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி) கட்டடங்களுக்காக வழங்கிய தொகை ரூபாய் 1,020 கோடியே 20 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது, 'அரைப்படி அன்னதானமாம், அதற்கு விடியும்வரை மேளதாளமாம்'. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பழமொழியைப் போல தி.மு.க.வினர் ஆட்சியிலிருந்தபோது, திட்டங்களுக்காக வெறுமனே கிள்ளிக் கொடுத்துவிட்டு, அள்ளிக் கொடுத்ததுபோல தம்பட்டம் அடித்துக் கொண்டார்கள். அவர்கள்தான் இந்த ஆட்சியைப் பார்த்துக் குறை சொல்கிறார்கள். அரசைத் தேடி மக்கள் வரும் முறையினை மாற்றி, 'அம்மா திட்டம்' மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களைத் தேடி அரசு வரும் என்று ஆணையிட்டு செயல்படுத்திய முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் துறைகளுக்கும் அள்ளித் தரும் வள்ளலின் வாரிசு, வருவாய்த் துறைக்கு வாரிக் கொடுத்த தொகை ரூபாய் 5,686 கோடியே 12 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை என்பது, ஒரு அரசின் கொள்கைகளை வெளிக்காட்டும் முக்கியமான குறிப்பேடு. மக்களுக்கு என்ன செய்ய வேண்டும், எந்தமாதிரியான நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து வழங்க வேண்டுமென்பது அவர்களின் திறமைவாய்ந்த நடவடிக்கைகளைச் சார்ந்தது. அதை எல்லோரும் மதித்துப் பின்பற்ற வேண்டும் என்று கூறினார் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு. ரீகன் அவர்கள். திரு. ரீகன் அவர்கள் சொன்னதையும் மிஞ்சிய திறமையோடு, நிதிநிலை அறிக்கையைத் தந்திருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-40*

*ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகையே அதற்கு சான்றாகும். அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூபாய் 21,186 கோடியே 58 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் நாட்டின் கண்கள் என்று சொல்வார்கள். சொன்னபடி பெண்களைக் கண்களாக மதித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.*

(மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்காக கண்ணியம் சேர்த்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் சிசுக் கொலையினைத் தடுப்பதற்காக நாட்டிற்கே முன்னோடியாக தொட்டில் குழந்தைகள் திட்டம் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதரவற்ற பெண் குழந்தைகளைப் பாதுகாக்க பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) பேறுகால நிதி உதவியை ரூ.6,000/– லிருந்து ரூ.12,000/- ஆகவும், பின்னர் அதை ரூ.18,000/– ஆகவும் உயர்த்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தை பிறந்ததும் 16 வகை பரிசுப் பொருட்கள் தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தாலிக்குக் கொடுத்த 4 கிராம் தங்கத்தை 8 கிராமாக உயர்த்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் நெற்றித் திலகம்போல் மங்களகரம். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் பயன்பெறும் அந்தக் குடும்பங்களுக்கு மகிழ்ச்சிக் கரம். பெண்களின் குறைகளைத் தீர்க்க எப்போதும் நீளுவது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அன்புக் கரம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கு ஒதுக்கீடு செய்த தொகை ரூ.4,512 கோடியே 32 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுக் கடைகளின் எண்ணிக்கையைக் குறைப்போம் என்று தேர்தல் வாக்குறுதியில் சொல்லியபடி, முத்தான முதல் கையெழுத்தாக 500 மதுக் கடைகளை மூடியதால் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது வருவாய் இழப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் தாய்க் குலங்களின் இதயங்களில் உயர்ந்திருக்கிறது மாண்புமிகு அம்மா அவர்களின் மதிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களது ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி அதிகமாக இருக்கிறது என்பதை முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல மறைத்துவிட்டு, அரசின் கடன் அதிகமாகிவிட்டது என்று அறிக்கை விடுகிறார்கள். தமிழக மக்களைக் காப்பாற்றுவதுதான் தன் தலையாய கடன் என்று நினைக்கின்ற ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேருந்து பயணிகளின் தாகம் தீர்க்க அம்மா குடிநீர் என்னும் அற்புதத் திட்டத்தை வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

*(மேசையைத் தட்டும் ஒலி) புதிய பேருந்துகள், புதிய வழித்தடங்கள், புதிய, புதிய சாதனைகள் என போக்குவரத்தில் புரட்சி ஏற்படுத்தி, போக்குவரத்துத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.1,295 கோடியே 8 இலட்சம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*தேர்தல் வாக்குறுதிகளையும், முக்கிய அறிவிப்புகளையும் நிறைவேற்றும் வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதிநிலை அறிக்கையில் சிறப்பாக திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்று நல்ல சிந்தனையாளர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறையிலுள்ள நலத் திட்டங்கள் எதையும் நிறுத்தவில்லை. புதிது புதிதாக நலத் திட்டங்கள் வழங்கவும் மறக்கவில்லை என்று நாடே மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது வெத்துவேட்டு நிதிநிலை அறிக்கை அல்ல. ஏழையெளியவரின் வேதனையை வீழ்த்தும் வெற்றி நிதிநிலை அறிக்கை என்பதை இந்த மாமன்றத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு"*

*என்கிறது உலகப் பொதுமறையாம் திருக்குறள். குடிமக்களை அன்போடு அரவணைத்து, அவர்கள் நலம்பெற பணி செய்து, நீதி நெறி தவறாமல் செங்கோல் செலுத்தி ஆட்சி செய்யும் மன்னவரது வழியை இந்த உலகமே தழுவி நிற்கும் என்கிறது வள்ளுவம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். எங்கள் அம்மாவின் ஈடு இணையில்லாத மக்கள் நலத் திட்டங்களை இந்தியாவே பின்பற்றுகிறது என்பது மட்டுமல்ல, இந்த உலகமே தழுவி செயலாற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-45*

*இரக்கத்தின் வடிவிலான திட்டங்களை இவ்வுலகின் எல்லா நாடுகளும் இறக்குமதி செய்கின்றன. பள்ளிவாசல்களுக்கும், நோன்புக் கஞ்சிக்கும் பச்சரிசி வழங்கும் எங்கள் பாசத் தாயின் பரிவுதனை (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் பாசத் தாயின் பரிவுதனை பாகிஸ்தானும் பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும்*

ஒலி) உரிமைக்குக் குரல் கொடுக்கும் எங்கள் அம்மாவின் ஓங்குபுகழ் வீரத்தை உலகமே பாராட்டுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தாய்க்குலத்தைத் தம் உயிராய்க் காத்து, ஏழைப் பெண்கள் திருமணத்திற்குத் தங்கம் தருகின்ற எங்கள் தங்கத்தாரகையை இத்தரணியே போற்றுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* உலகத் தரக் கல்வி தரும் ஒப்பில்லா எங்கள் அன்னையை ஈரிலையில் வாழ்கின்ற இரண்டாம் கலைமகள் என்று இவ்வுலகமே போற்றுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

ஏறெடுத்துப் பார்க்கும் பார்வை, ஏனென்று கேட்கும் கேள்வி, எடுத்து வைக்கும் அடிகள், வெள்ளைத் தாள் எடுத்து எழுதும் எழுத்து, என்றென்றும் வளையா செங்கோல் என்பதாக *(மேசையைத் தட்டும் ஒலி)* மக்களாட்சிக்கே இலக்கணம் வகுத்து, பசியில்லை, பஞ்சம் இல்லை, வறுமை இல்லை, வன்முறை இல்லை, சாதி, மத பேதம் இல்லை, ஆதலாலே சாதிச் சண்டைகள் எதுவும் இல்லை, *(மேசையைத் தட்டும் ஒலி)* கலையுலக வளைப்பு இல்லை, கருணைக்குப் பஞ்சம் இல்லை, மக்களுக்கோ கவலைக்கே இடமில்லை, *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்புள்ளத்தால் அரசாட்சி நடத்துகின்ற எங்கள் அம்மா ஆளும் காலமெல்லாம் அரசியல் பகைவர்களுக்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* எங்கள் அம்மா ஆளும் காலமெல்லாம் அரசியல் பகைவர்களுக்கு அடையாளமும் இல்லை, *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசியல் எதிர்ப்புக்கு வாய்ப்பே இல்லை *(மேசையைத் தட்டும் ஒலி)* அரசியல் எதிர்ப்புக்கு வாய்ப்பே இல்லை என்கிற புதிய சூழலை தமிழகத்தில் உருவாக்கி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்கின்ற *(மேசையைத் தட்டும் ஒலி)* பொற்காலம் படைக்கின்ற பொன்மனத் தாயின் மண் மணக்கும் சாதனைப் பயணத்தில் *(மேசையைத் தட்டும் ஒலி)* வாகைப் பூக்கள் மட்டுமே வரிசை கட்டி நிற்கும். எங்கள் தெள்ளுதமிழ் தாய்க்கு திசை எட்டும் கிழக்காக மலர்ந்து நிற்கும்.

வரவிருக்கும் உள்ளாட்சி மன்றத் தேர்தலில் *(மேசையைத் தட்டும் ஒலி)* மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி என உள்ளாட்சி அமைப்புகள் யாவிலும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கே வெற்றி! வெற்றி! வெற்றி! *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று வெற்றி மாலைகள் தேடி வந்து சேரும் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்றுரைத்து என் உரையை பணிவோடு நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 1. முந்தைய சில நாட்களுக்கான பேரவை நடவடிக்கைக் குறிப்புகளின் சில பகுதிகளை நீக்கக் கோருதல்— பேரவைத் தலைவரின் தீர்ப்பு—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நேற்றையதினம் நிதிநிலை அறிக்கைமீது நடந்த விவாதத்தின்போது தி.மு.க. உறுப்பினர்கள் சட்டம்—ஒழுங்கு பற்றிப் பேசியதற்கு பதிலாக மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் திருவாரூரில் நடைபெற்ற தி.மு.க. உறுப்பினர் ஒருவரின் கொலை சம்பந்தமாகக் கூறினார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். நான் அதைப் படித்துப் பார்த்துவிட்டு பிறகு எனது தீர்ப்பைச் சொல்கிறேன் என்றும், அதுவரை பத்திரிகைகள் இதுகுறித்து செய்தி எதுவும் வெளியிட வேண்டாம் என்றும் நேற்றைக்கு உத்தரவிட்டிருந்தேன். நான் அவைக் குறிப்புகள் அனைத்தையும் வாங்கி, தீவிரமாக அவற்றைப் பார்வையிட்டு பரிசீலித்தேன். அவ்வாறு பரிசீலித்ததில், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அந்த வழக்கிற்குக் குந்தகம் விளைவிக்கிற மாதிரி எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் முழுக்க, முழுக்க தி.மு.க. ஆட்சியிலே இருந்த சட்டம்-ஒழுங்கைப் பற்றித்தான் விமர்சனம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அவர் வழக்கிற்கோ, வழக்கிற்கு குந்தகம் விளைவிக்கிற மாதிரியோ எதுவும் பேசவில்லை என்கிற காரணத்தினால், அவைக் குறிப்பிலிருந்து மாண்புமிகு அமைச்சர் பேசியது எதையும் நீக்கத் தேவையில்லை என்று நான் தீர்ப்பு அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-50*

*அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் பேசுகிறபொழுது, இந்த* budget-*ஐ பற்றி சில விமர்சனங்கள் வெளியில் வந்ததை உரையிலே குறிப்பிட்டார்கள். அது ஏற்கெனவே தி.மு.க. உறுப்பினர்களால் பத்திரிகைகளுக்கு செய்தியாக கொடுக்கப்பட்ட விவரங்களைத்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் இங்கே பேசினாரே ஒழிய, அதற்கு மாறான வாதங்களை, தவறான வாதங்கள் எதுவும் இந்த அவையிலே சொல்லவில்லை என்கிற காரணத்தினால்,*

அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கத் தேவையில்லை நான் தீர்ப்பு அளிக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் பேசுகிறபொழுது சர்க்காரியா கமிஷன் பற்றி குறிப்பிட்டார்கள். சர்க்காரியா கமிஷன் என்பது பலமுறை இந்த அவையிலே விவாதித்து, அது அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிற காரணத்தினாலே அந்த விவாதத்தையும், அவர் சொல்லிய கருத்தையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கத் தேவையில்லை என்பதை நான் என்னுடைய தீர்ப்பாக, தெளிவாகத், தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவை மரபுகளுக்கு மாறாக, விதிகளுக்குப் புறம்பாக, அவையில் பேசுவதைத் தவிர்க்கப்பட வேண்டிய சொற்களாக இவர்கள் பேசியது இல்லாததாலும், ஏற்கெனவே இதுபோன்ற முன்மாதிரிகள் உள்ளதாலும், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று உத்தரவிடுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 1-8-2016 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை முற்பகல் 11-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

-ஏதுமில்லை-

*****

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the**
**Director of Stationery and Printing,**
**Chennai-600 002.**